பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 26 வெள்ளிக்கிழமை 10.03.2023 கதிர் 121

# போராட்டக்காரர் மீது இரசாயனத் தாக்குதல்?

## சந்தேகம் கிளப்பினார் ஜேவிபி தலைவர்



தெற்கில் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட போராட்டக்காரர்கள் மீது இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்ற சந்தேகம் கிளப்பியுள்ளார் ஜே.வி.பி. தலைவர் அநுர குமார திஸாநாயக்க. ☞ 2

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் தெரிவு 5 ஆண்டு காலத்தில் 4ஆவது தடவையாக இடம்பெறவுள்ளது. இந்தத் தடவையும் உருப்படியான முதல்வர் எவரும் தெரிவுசெய்யப்படும் சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் அரசுக் கட்சி சொலமன் சூ.சிறிலை தனது வேட்பாளராக முன்னிறுத்தியுள்ளது.

தேர்தல் காலம் என்பதால் தமிழ் அரசுக் கட்சியை எப்படியும் காலை வாருவது என்பதில் தீவிரமாக, தீர்க்கமாக நிற்கும் அதன் முன்னாள் பங்காளிகள் உள்ளிட்ட எல்லாக் கட்சிகளும் சேர்ந்துகொண்டு இந்தத் தடவையும் யாரும் முதல்வராகத் தெரிவாக முடியாத நிலையை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளன.

45 உறுப்பினர்களைக் கொண்ட யாழ். மாநகர சபையில் ஈபிடிபி உறுப்பினரான முடியப்பு றெமீடியஸ் உயிரிழந்துபோனதால் தற்போது 44 பேர் உள்ளனர். அவர்களில் முன்னாள் முதல்வர் மணிவண்ணன் தரப்பில் 13 பேர் உள்ளனர். இவர்கள் அனைவரும் இப்போது - தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர்கள். இவர்கள் அனைவரும் இன்றைய முதல்வர் தெரிவைப் புறக்கணிப்பார்கள்.

சிறிலை நிராகரிப்பதற்கு அவர்களிடம் பொருத்தமான காரணம் ஏதும் இல்லை என்பதால் மதவாதத்தை இப்போது தூக்கிப் பிடித்துள்ளார்கள். கிறிஸ்தவர் ஒருவரை முதல்வராக்குவதா என்று சொல்லிக் கொண்டு இவர்கள் இன்று சபைக்குள்ளே வரமாட்டார்கள். வெளியே வந்து கையெ முத்து வைப்பார்கள் என்றே நினைக்கின்றேன். அப்போதுதானே கொடுப்பனவுகளைச் சிக்கலின்றிப் பெறமுடியும்.

தமிழ் அரசுக் கட்சி வசம் அதன் 9 உறுப்பினர்களும் ரெலோ மற்றும் ஐதேக என உதிரிகளுமாக 11 பேர் மட்டுமே உள்ளனர். ஈபிடிபியினர் வசம் இப்போது 7 உறுப்பினர்கள் உள்ளனர். ☞ 2

## தேர்தலை எதிர்கொள்ள பெரமுன தயார்

ஏப்ரல் 25ஆம் திகதி அறிவிக்கப்பட்டவாறு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படுமாயின் அதனை எதிர்கொள்வதற்குப் பொதுஜன பெரமுன தயாராகவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ரோஹித்த அபேகுணவர்த்தன மற்றும், குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜோன்சன் பெர்னாண்டோ ஆகியோர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தனர். ☞ 2

## சுற்றுலாவிகள் எண்ணிக்கை 1 இலட்சத்தை தாண்டியது

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மாதாந்தம் ஒரு இலட்சத்தினை கடந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுற்றுலாவிகள் இலங்கைக்கு வருகை தருகின்றமை அதிகரித்துள்ளது. குறிப்பாக கடந்த இரண்டு மாதங்களில் அந்த எண்ணிக்கை இரண்டு ☞ 2

## பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களும் போராட்டம்

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் அரசுக்கு எதிராக வியாழக்கிழமை போராட்டம் நடத்தினர். கலஹா சந்தியில் ஒன்றுகூடிய அவர்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக முழக்கமிட்டனர்.

செவ்வாய்க்கிழமையும் புதன் கிழமையும் கொழும்பிலும் களனியிலும் போராட்டங்கள் நடத்திய பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் திட்டமிட்டு நடத்திய தாக்குதல்களைக் கண்டித்தே பேராதனை மாணவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

பொலிஸார் வேண்டுமென்றே மாணவர்களைத் தாக்கின என அவர்கள் குற்றஞ்சாட்டிப் பெருங்குரல் எழுப்பினர். இந்தப் போராட்டம் கண்டி, கொழும்பு பிரதான வீதியின் ஒரு பகுதியை இடைமறித்து முன்னெடுக்கப்பட்டது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் அப்பாதையை அவசர அவசரமாக மூடிய பொலிஸார், மாற்றுப் பாதை ஊடாக வாகனங்களைத் திருப்பி விட்டனர். ☞ 2

## வவுனியாப் பல்கலைக்கழக ஊழியர்களும் போராட்டம்

வவுனியா பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் வியாழக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பல்கலைக்கழக வாயிலிற்கு முன்பாக ஒரு மணிநேரம் பதாகைகளைத் தாங்கியபடி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மின்சாரம் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு மற்றும் பல்கலைக்கழகத்திற்கான ஊழியர் நியமனம், சம்பளப் பிரச்சினை போன்றவற்றிற்குத் தீர்வு தருமாறு வலியுறுத்தியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது

"மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் மீது கைவைக்காதே", "சம்பள அதிகரிப்பின் மிகுதியை வழங்கு", "மின்சார - எரிபொருள் விலையைக் குறை", "சம்பள உயர்வை வழங்கு" போன்ற பதாகைகளை போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்..

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இது போன்றதொரு அடையாளப் போராட்டம் இடம்பெற்றிருந்தது.

## யானைகளிடமிருந்த காப்பாற்ற பிரமந்தனாறு மக்கள் மன்றாட்டு

யானைகளின் அச்சுறுத்தல் மற்றும் அவற்றால் ஏற்படும் சொத்தழிவுகளிலிருந்த காப்பாற்றுங்கள் என பிரமந்தனாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரமந்தனாறு பகுதிக்குள் நுழையும் யானைகளால் தொடர்ச்சியாக விவசாயத்திற்குப் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது. இரவு நேரங்களில் நுழையும் யானைகள் பயன்தரும் தென்னைமரங்களை அழித்து சேதப்படுத்துகின்றன..

யானைகளால் அவ்வப்போது சொத்துக்களுக்கும் சேதங்கள் ஏற்படுவதாக விவசாயிகளும் அந்தப் பகுதி மக்களும் முறையிடுகின்றனர்.

புதன்கிழமை இரவு குறித்த பகுதிக்குள் நுழைந்த யானைகள் ஒருவரது காணியில் 14 தென்னை மரங்களை அழித்துள்ளன. பிரதேச மக்கள் ஒன்றிணைந்து யானைகளை துரத்தியுள்ளனர்.

ஒருமாத காலத்திற்கு மேலாக இவ்வாறு யானைகளின் தொல்லை இருந்து வருவதாகவும் இதனால் ☞ 2

## உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தலை நடத்தவேண்டும்

### பௌத்த சாசன செயலணி ஜனாதிபதிக்கு கடிதம்

தேசிய மற்றும் இராஜதந்திர ஸ்திரதன்மைக்காக உளளூராட்சி தேர்தலை ஜனாதிபதி உடனடியாக நடத்தவேண்டும் என பௌத்தசாசன செயலணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் பௌத்தசாசன செயலணி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

அமைச்சர்கள் எண்ணிக்கையை 15 ஆக மட்டுப்படுத்தவேண்டும். இராஜாங்க அமைச்சர்களை நீக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள பௌத்த சாசன செயலணி ஆடம்பர பொருள் இறக்குமதியை நிறுத்தவேண்டும் அந்த நிதியை தேர்தலுக்கு செலவிடவேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

## அரசியலுக்கு வர சந்திரிக்கா தயார்


### அவரே அறிவிப்பு



தான் மீண்டும் அரசியலுக்கு வரத் தயார் என்று அறிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. ☞ 2

## ஒரு தரப்பினால் தனியாக தேர்தலை நடத்தமுடியாது

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி கருத்து



உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலைத் தனியாக ஒரு தரப்பினரால், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் மட்டும் நடத்த முடியாது என்று தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல்கள் ஆணைக்குழுவும், ஆட்சியாளர்களும் இணைந்து செயற்படுகின்றபோதுதான் தேர்தலை நடத்தமுடியும். அதற்கான சாத்தியப்பாடுகளே அதிகமுள்ளன.

தற்போது அவ்வாறான நிலைமைகள் தென்படவில்லை. ☞ 2

## அமைச்சர்கள் எண்ணிக்கையை குறைத்து தேர்தல் நிதி பெறுக

### புத்தசாசன குழு ஆலோசனை

அமைச்சர்களின் எண்ணிக்கையை 15ஆகக் குறைத்து, அரச நிகழ்வுகள் அனைத்தையும் நிறுத்தி அதன் மூலம் கிடைக்கும் பணத்தை தேர்தல் செலவுகளுக்குப் பயன்படுத்தவேண்டும் என்று புத்தசாசன நிறைவேற்றுக் குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், அமைச்சுக்களின் எண்ணிக்கையை 15ஆகக் குறைத்தல், அமைச்சுகளின் நிர்வாகத்தினை செயலாளர்களின் கீழ் கொண்டுவருதல், அரச நிகழ்வுகள் அனைத்தையும் நிறுத்தி வைத்தல், சகல ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதிகளையும் நிறுத்துதல், அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் அத்தியாவசியமற்ற செலவுகளை குறைத்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதன் ஊடாக தேர்தலை நடத்தவதற்கு தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அந்தக் கடிதத்தில் புத்தசாசன நிறைவேற்றுக்குழு ☞ 2

## யாழ். மாநகர சபையின் முதல்வர் தெரிவு இன்று

யாழ்ப்பாணம், மார்.10

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய முதல்வர் தேர்வு இன்று இடம்பெறவுள்ளது.

சபைக்குப் புதிய முதல்வராகத் தேர்தவு செய்யப்பட்ட இ.ஆனல்ட் முன்வைத்த வரவு - செலவுத் திட்டம் 14 நாட்களுக்குள் அடுத்தடுத்துத் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து அவர் பதவியிழந்தார்.

இதைத் தொடர்ந்து புதிய முதல்வருக்கான தெரிவு நடக்கும் என்று உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்தார். ஒரு சபையில் 50 வீதத்திற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் கட்சி சார்பில் முன்னிறுத்தப்படும் இரு முதல்வர்களதும் வரவு - செலவுத் திட்டங்கள் அடுத்தடுத்துத் தோற்கடிக்கப்பட்டால ☞ 2

## மக்களின் வாக்குரிமையை பறிக்கிறார் ஜனாதிபதி

### நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

ஜனாதிபதி நாட்டின் சர்வ அதிகாரங்களையும் கொண்ட நபராக மாறி மக்களின் வாக்குரிமையைப் பறித்து வருகின்றார்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார்.

தேர்தலை ஒத்திவைப்பதற்கும் வாழ்க்கைச் செலவை அதிகரிப்பதற்கும் எதிராக நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடிமட்டத்தில் ஜனநாயகத்தைப் பிரதிபலிக்கும் மிக முக்கியமான நிறுவனமாக உள்ளூராட்சி சபைகளை அழைக்கலாம். தற்போது மாகாண சபைகளும் இயங்காத நிலையில், அதுவும் நிறைவேற்று அதிகாரத்தின் கைகளில் தவழும் சந்தர்ப்பத்தில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாதது நாட்டின் அடிப்படை ஜனநாயகக் ☞ 2

## வாக்குச்சீட்டு அச்சிட ரூ. 300 மில். அவசியம்

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்காக வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்கு ஆகக்குறைந்தது 300 மில்லியன் ரூபா தேவை என்று வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தததாவது:

நிதி, நிர்வாகம் சம்பந்தமான அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே உள்ளது. அதனால் நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைக் ☞ 2

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி செய்த 24 பேர் கைது

வெளநாடுகளில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் வெளநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசாரணைப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விரு மாதங்களிலும் சுமார் 173 முறைப்பாடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த மோசடிகள் மூலம் முறைப்பாட்டாளர்களிடம் இருந்து ஏமாற்றப்பட்ட பணம் 126 இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவர்களும் அனேகமாக வாக்கெடுப்பில் கலந்து கொள்ளமாட்டார்கள். கூட்டத்திற்கு வந்தாலும் சபா மண்டபத்திற்குள் நுழையாமல் வெளியே காத்திருப்பார்கள்.

புளொட் மற்றும் ரெலோ உறுப்பினர்கள் எந்த முதல்வர் தெரிவிலும் கலந்துகொள்ளக்கூடாது, அந்தப்பக்கமே போகக்கூடாது என்று அறிவித்தல் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதனால் அவர்களும் வர மாட்டார்கள். அந்தக் கணக்கில் 4 பேர் அவுட். மாவை சேனாதிராசாவுக்கு மனமிரங்கி, அந்தாள் தங்களை இவ்வளவு காலமும் சகித்துக்கொண்டு கூட இழுத்துத் திரிந்ததே என்ற கொஞ்சநஞ்ச நன்றியுணர்வு ஏதும் எட்டிப்பார்த்து சித்தரும் செவத்தாரும் மனம் மாறினால் தவிர புளொட் மற்றும் ரெலோவின் 5 உறுப்பினர்களும் வாக் கெடுப்பில் கலந்துகொள்ளமாட்டார்கள்.

இந்தத் தடவை ஐதேக உறுப்பினர்களும் கட்சியால் மிரட்டப்பட்டுள்ள நிலையில் அவர்களும் பங்கேற்பது சந்தேகம். அதனால் கூட்டத்தை நடத்துவதற்குத் தேவையான 23 உறுப்பினர்கள் என்கிற நிறைவெண் இன்று முதல்வர் தெரிவை நடத்துவதற்குக் கிடைப்பது துர்பலமே. அப்படி நடக்காமல் போனால் மார்ச் 19ஆம் திகதியுடன் மாநகர சபையின் ஆட்சிக் காலம் முடிவடையும் வரைக்கும் சபைநடவடிக்கைகளைபதில் முதல்வரே முன்னெடுத்துச் செல்வார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், தமிழ் அரசுக் கட்சியைத் தவிர முதல்வர் வேட்பாளரை நிறுத்துவதற்கு வேறு எந்தக் கட்சிக்கும் துணிவில்லை. நாங்கள் வேட்பாளரை நிறுத்துகின்றோம் நீங்கள் ஆதரவு தாருங்கள் என்று தமிழ் அரசுக் கட்சியுடன் பேரம் பேசும் ஆற்றலும் இல்லை. இந்த நிலையில் வைக்கற்போர் ............ மாதிரி (இதை நான் எழுதப்போக பிறகு எனக்கும் மாநகர சபையிலிருந்து ஒரு மாத தடை விதித்தாலும் விதிப்பார்கள்) தாங்களும் முதல்வராக மாட்டார்கள் வருபவரையும் விடமாட்டார்கள். ஆனால் எல்லாம் மக்களுக்காகத்தான் என்று மேடைக்கு மேடை பீற்றுவார்கள், பிதற்றுவார்கள். கவனித்துக் கொள்ளுங்கள் மக்களே!

*****

தெற்கில் நிலமை தீவிரமடைந்துகொண்டே செல்கின்றது. பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் (ஐஎம்எவ்) கடன் கிடைப்பதற்கு இருந்த தடைகள் அகற்றுவிட்ட நிலையில் எல்லாவற்றையும் சமாளித்துவிடலாம் என்று ரணில் கனவு கண்டார். ஆனால் தொழிற்சங்கங்கள் அவரது கழுத்துக்குச் சுருக்குக் கயிறு மாட்டியுள்ளன.

தொழிற்சங்க நடவடிக்கைகள் நேற்று முதல் தொடங்கியுள்ளன. எதிர்வரும் 15ஆம் திகதிவரை ஒவ்வொரு தொழிற்சங்கமாக தமது சேவைகளை முடக்கி வந்து 15ஆம் திகதி அனைத்துச் சேவைகளையும் நிறுத்தி நாட்டை முழுமையாக முடக்குவது என்று 40க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களைக் கொண்ட கூட்டமைப்பு முடிவு செய்துவிட்டது.

ரணிலுக்கோ இரு தலைக் கொள்ளி எறும்பின் கதை. ஐஎம்எவ் கடனைப் பெறுவதற்காக வரிவிடயத்தில் விட்டுக்கொடுக்காதுபோனால் 15ஆம் திகதி முதல் பெரும் பிரளயம் ஏற்படும். போராட்டக்காரர்களுக்குப் பயந்து வரியை நீக்கி அல்லது குறைத்துவிட முடியாது. இவர்களைத் திருப்திப்படுத்த அப்படிச் செய்தால் ஐஎம்எவ் கடன் அந்தரத்தில் தொங்கிக்கொள்ளும். அந்தக்கடனுக்காக இங்கே எதையும் செய்யாமல்விட்டால் தொழிற்சங்கங்கள் ஆப்படித்து விடும்.

போதாக்குறைக்கு தேன் கூட்டில் கல்லெறிந்த கதையாகப் பல்கலைக்கழக மாணவர்கள் மீதும் தாக்குதல் நடத்தி அவர்களைச் சீண்டி விட்டாயிற்று. செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தை பொலிஸார் கண்ணீர்புகைக் குண்டுகளை வீசியும் நீர்த்தாரைத் தாக்குதல் நடத்தியும் கலைத்த பின்னர் அவர்கள் மத்தியில் பேசிய அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றித் தலைவர் வசந்த முதலிகே, அரகலயவை நாம் எப்படி நடத்தினோமோ அதேபோன்றதொரு எழுச்சிக்குத் தயாராகுங்கள் என்று மாணவர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

இந்த அறைகூவல் காணொலி சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவியதை அடுத்து, அதில் கருத்துத் தெரிவித்த பலரும் வசந்த முதலிகே எப்பத்தான் பல்கலைக்கழகப் படிப்பை முடிப்பார் என்று நக்கலாகக் கேள்வி கேட்டுள்ளனர். என்னுடைய கேள்வியெல்லாம் இப்படி அடக்குமுறையாக நடக்கும் அரசும் ஆட்சியாளர்களும் இருக்கும்வரை, மாணவர்களை நிம்மதியாகப் படிக்க விடாத வரை அந்தப் பையனும்தான் எப்பிடி சமூகமாகப் படித்துவெளியேறுவது?

- இடிமின்னல் -

## தேர்தலை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) "பொதுஜனபெரமுன தேர்தலுக்கு தயராகவே உள்ளது. எமது கட்சி எந்தச் சந்தர்ப்பத்திலும் தேர்தலைக் கண்டு அச்சம் கொண்டதில்லை. போராட்டங்கள், பேரணிகள் ஊடாக ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு முயற்சித்தால் அது ஒருபோதும் நடைபெறாது. அதற்கு இடமளிக்கப்போவதும் இல்லை" என்றார் ரோஹித்த அபேகுணவர்த்தன. .

''எமது கட்சியே உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை முதலில் செலுத்தியது. வேட்பு மனுக்களை தாக்கல் செய்தது. ஆகவே நாம் தேர்தலுக்கு தயராகவே உள்ளோம். ஏப்ரல் 25இல் தேர்தல் நடந்தால் அதனை எதிர்கொள்வோம்'' என்று ஜோன்சன் பெர்னான்டோ தெரிவித்தார்.

## சுற்றுலாவிகள் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இலட்சத்தினைக்கடந்துள்ளது.

அதேநேரம், மார்ச் மாதத்தின் முதல் ஆறு நாட்களில் மட்டும் 24ஆயிரம் சுற்றுலாவிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இந்த நிலைமை மீண்டும் சுற்றுலாத்துறை புத்துணர்ச்சி பெற்று வருவதை வெளிப்படுத்தியுள்ளது - என்றார்.

## போராட்டக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பெலவத்தவில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் வியாழக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சியாளர்களுக்கு எதிரான நியாயமான போராட்டங்களில் பங்கேற்ற எமது கட்சியின் சகோதரர் நிமல் உயிரிழந்துள்ளார். கொழும்பு பல்கலைக்கழக போராட்டத்தில் பிரியந்த வன்னிநாயக்க என்பவர் உயிரிழந்துள்ளார்.

இவர்கள் இருவரும் போராட்டங்களில் பங்கேற்ற போதே உயிரிழந்துள்ளனர். இதனால் இந்தப் போராட்டங்களின் போது பயன்படுத்தப்பட்ட கண்ணீர்ப்புகை குண்டுகள் தொடர்பில் எமக்கு சந்தேகங்கள் எழுகின்றன.

இரகசியமான முறையில் இரசாயணத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக என்ற வலுவான சந்தேகம் எமக்குள் காணப்படுகின்றது. கலகம் அடக்கும் பிரிவினர் உலகில் தடைசெய்யப்பட்ட நச்சுத்தன்மை கொண்ட பொருட்களை பயன்படுத்தியுள்ளனரா என்ற சந்தேகமும் காணப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த வெறித்தனமான செயற்பாடுகளால் தேசிய மக்கள் சக்தியை தடுத்து நிறுத்திவிடமுடியாது. ரணிலின் சக்தியை மக்கள் சக்தி வெற்றி கொள்ளும் - என்றார்.

## பேராதனைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) போராட்டப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்போதும், கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதலோ அல்ல நீர்த் தாரைத் தாக்குதலோ நடத்தப்படவில்லை.

"அமைதியான மாணவர்களின் போராட்டத்தினை கலைக்கும் பொருட்டு பொலிஸார் எல்லைமீறி நடந்துகொண்டுள்ளனர். ஆகவே, இதுதொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும்'' என்றார் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் மாணவர் ஒன்றிய உறுப்பினரான ஹார்னி மதுவந்தி.

## யானை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமது வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகள் மக்கள் குடியிருப்புக்களிற்குள் நுழையாத வகையில் தடுப்பு வேலிகளை ஆட்சியாளர்கள் அமைத்துத் தரவேண்டும் என்றும் மக்கள் வலியுறுத்துகின்றனர்.

## ஒரு தரப்பினால்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆட்சியாளர்கள் ஒரு போக்கில் செல்கின்றனர். தேர்தல்கள் ஆணைக்குழு வேறொரு போக்கில் செல்கின்றது.

இருதரப்பினரும் இரு திசையில் நின்று கயிறிழுப்பார்களானால் தேர்தலை நடத்தமுடியாது. ஆகவே இரு தரப்பினரும் ஒன்றிணைவது அவசியம் என்பதே எனது நிலைப்பாடாகும் - என்றார்.

## அரசியலுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) புதிய பயணத்திற்கான தலைமைத்துவத்தினை வழங்குவதற்கு தயராக உள்ளேன், பேதங்களின்றி அனைவரும் ஒன்றிணையுங்கள் என்று அவர் அழைப்பும் விடுத்துள்ளார்..

புதிய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உலக மகளிர் தினநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது ஆட்சி காலத்தில் ஆகக்கூடியது நூற்றுக்கு ஒரு சதவீத வட்டி அடிப்படையில் மாத்திரமே கடன் பெறப்பட்டது. ஆனால் ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் சீனாவிடமிருந்து 9 சதவீத வட்டிக்கு கடன் பெறப்பட்டது.

ராஜபக்ஷக்கள் மோசடி செய்வதற்காகவே கடன்களைப் பெற்றார்கள். அவர்களால் பெறப்பட்ட கடன்களைச் செலுத்த முடியாமல் தற்போது நாம் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றோம்.

இறுதியில் வங்குரோத்தடைந்த நாடாக அறிவிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. உலகில் வங்குரோத்தடைந்துள்ளதாக அறிவித்துள்ள மிகக்குறைவான நாடுகளில் இலங்கையும் ஒன்றாகியுள்ளது.

உலகின் முதலாவது பெண் பிரதமரைத் தெரிவு செய்தது இலங்கை. இது போன்ற பல சாதனைகளைச் செய்திருக்கவேண்டும். ஆனால் சுதந்திரத்தின் பின்னர் பெற்றுக்கொண்ட அனைத்தையும் இழந்தமைதான் நாம் சாதித்திருப்பது. இவற்றை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

மீண்டும் ராஜபக்ஷக்கள் அதிகாரத்துக்கு வருவதை அனுமதிக்க முடியாது. பொது மக்கள் அனுமதிக்கவும்கூடாது. ஏற்கனவே போரை வெற்றி கொண்டுள்ள நாம் பொருளாதாரப் போரையும் வெற்றி கொள்வோம் என்று ராஜபச்ஷக்கள் கூறுவார்கள். அதனை நம்பி ஏமாந்து விடக்கூடாது.

நாட்டின் தற்போதைய நிலைமைக்கு மக்களே பொறுப்புக்கூற வேண்டும். இதில் பிரதானமாக தவறிழைத்தவர்கள் பொது மக்களாவர். சரியாக ஆராய்ந்து பார்க்காமல் 69 இலட்சம் வாக்குகளை வாரிவழங்கினர். இந்த வீழ்ச்சியை முற்றாகச் சரி செய்வதற்கு 25 - 30 ஆண்டுகளாவது செல்லும். எனவே குறைந்தபட்சம் இப் போதிருந்தாவது நாட்டைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும்.

கட்சி, இன, மத பேதமின்றி அனைவரையும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கின்றேன் அதற்கு தலைமைத்துவம் வகிக்கவும், வழிகாட்டவும், ஆலோசனைகளை வழங்கவும் நான் தயாராகவுள்ளேன் - என்றார்.

## வெளிநாட்டு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என்று வெளநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

வெளநாட்டு தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்காகச் சட்டவிரோத நிறுவனங்கள் மற்றும் முகவர்களிடம் பணம் வழங்குவதைத் தவிர்க்குமாறு வெளநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறான நபர்கள் தொடர்பில் 0112 864 241 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தகவல்களை வழங்குமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவுறுத்தியுள்ளது.

## அமைச்சர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கடிதத்தில், ஸ்ரீசுமண தேரர், ஆனந்த தேரர், உள்ளிட்டவர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

## யாழ். மாநகர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மட்டுமே சபை கலையும் என்றும் அத்தகைய ஒரு நிலை யாழ்ப்பாண மாநகர சபையில் இல்லை என்றும் கூறப்படுவதால் புதிய முதல்வர் தெரிவை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து இன்றைய தினம் புதிய முதல்வர் தெரிவு இடம்பெறும் என்று உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்திருந்தார்.

45 உறுப்பினர்களை கொண்டுள்ள மாநகரநபையில் முதல்வர் தெரிவிற்கு 23 பேருக்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்பது கட்டாயம்.

## வாக்குச்சீட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கேள்வியொன்று வந்துள்ளது. அது தொடர்பில் சிறப்புரிமைக் குழுவில் ஆராயப்படுகின்றது.

இதேநேரம், நீதிமன்றத்தின் தீர்ப்பும் வெளியிடப்பட்டுள்ளது. அந்த வகையில், தேர்தலை நடத்துவதாக இருந்தால் அரச அச்சகத்துக்கான பணத்தினை விடுவிக்க வேண்டும். தற்போதைய சூழலில் அரச அச்சகத்துக்கான நிதித் தேவை 500 மில்லியனாக இருக்கின்றது. எனினும், செலவுச் சுருக்கங்களை மேற்கொள்கின்றபோது 300 மில்லியன் ரூபா செலவில் அச்சிடும் பணியை முடிக்க முடியும்.

பொலிஸார் அதற்கான பாதுகாப்புக் கடமையில் அமர்த்தப்படவேண்டும். அவர்கள் அதற்குரிய அறிவுறுத்தலுடன் கடமையில் அமர்த்தப்பட வேண்டியது முக்கியமானது. ஆகவே, தேர்தலை நடத்துவதாக இருந்தால் இந்தச் செயற்பாடுகளையே முன்னெடுக்க வேண்டும். அச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் எவ்வித மானதாமதங்களும் ஏற்படாது - என்றார்.

## மக்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கட்டமைப்பை அழிப்பதாக நாம் கருதுகின்றோம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஏற்படும் தடைகள் மக்களின் இயல்புவாழ்க்கைக்குப் பெரும் அடியாக அமைகின்றன. இதன் ஊடாக மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் கூடத் தடைப்படுகின்றன.

நிதி இன்மை எனக் காரணம் காட்டி உள்ளூராட்சி சபைத் தேர்தலைச் சீர்குலைக்கும் தற்போதைய அரசு, நிதியில்லை என்று கூறி எதிர்காலத்தில் பொதுத் தேர்தலையும் ஜனாதிபதித் தேர்தலையும்கூடச் சீர்குலைக்கலாம் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622












காலைக்கதிர்
Kalaikkathir

# கட்சிகளில் உள்ள பயங்கரவாதிகளே நாட்டைக் குழப்பப் போராடுகின்றனர்

## அமைச்சர் காஞ்சன சாடல்

சாதாரண மக்கள் போராட்டத்தில் ஈடுபடவில்லை. அரசியல்கட்சிகளில் உள்ள பயங்கரவாதிகளே போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2022 ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பதைப் பெரும்பாலான தரப்பினர் தற்போது மறந்துவிட்டார்கள்.

அரசாங்கம் எடுத்த கடுமையான தீர்மானங்களால் பொருளாதாரப் பாதிப்புக்கு ஒப்பீட்டளவில் தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது என்பதை எதிர்க்கட்சிகள் நன்கு அறியும். ஆனால் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக அவர்கள் அதனைப் பகிரங்கமாகக் குறிப்பிடுவதில்லை.

கடந்த ஆண்டு பல மணித்தியாலங்கள் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டபோது ஒரு தரப்பினர் வீதிக்கு இறங்கி தீ பந்தம் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

தற்போது 24 மணித்தியாலங்களும் தடையின்றி மின்சாரம் விநியோகிக்கப்படும்போதும் ஒரு தரப்பினர் தீ பந்தம் ஏந்தி போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

நாட்டின் நிதி நிலையை மேன்மேலும் தீவிரப்படுத்தும் வகையில் தொழிற்சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். போராட்டத்தில் ஈடுபடும் தொழிற்சங்கத்தினர் ஓர் அரசியல் கட்சிக்கு சார்பாகச் செயற்படுகிறார்கள்.

ஒரே தரப்பினர்தான் அனைத்துப் போராட்டங்களையும் முன்னெடுக்கிறார்கள். கடந்த வாரம் தொழிற்சங்கத்தினர் மேற்கொண்ட போராட்டத்தால் தேசிய வருமானம் பாதிக்கப்பட்டது. இவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும். நாடு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும் எனப் பொதுமக்கள் கருதுகிறார்கள்.



சாதாரணமக்கள்போராட்டத்தில் ஈடுபடவில்லை. அரசியல் கட்சிக்கு ஆதரவாகச் செயற்படும் பயங்கரவாதிகள்தான் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு தடையான போராட்டங்கள் மீது சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் தாக்குதல் மேற்கொள்ள வேண்டும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை மேன்மேலும் தீவிரப்படுத்தும் வகையில் திட்டமிட்ட வகையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பொருளாதார முன்னேற்றத்துக்கு தடையான போராட்டங்களுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. – எனத் தெரிவித்துள்ளார்.



# களுவாஞ்சிக்குடியில் மகளிர் தின நிகழ்வு

இலங்கைதமிழரசு கட்சியின் மகளீர்தின நிகழ்வு புதன்கிழமை மாலை மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

போரில் உயிரிழந்த மாவீரர்கள்,பெண்போராளிகள் படுகொலைசெய்யப்பட்ட மக்கள் நினைவுகூரப்பட்டு அஞ்சலியும் செலுத்தப்பட்டது. தொடர்ந்து மகளிரின் சிறப்பு பற்றியதான கவிதை, பேச்சு மற்றும் பாடல் என்பன இடம் பெற்றன.

மண்முனை தென் மேற்கு பிரதேச சபையின் உப தவிசாளர் ரஞ்சினி கனகசபை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், ஞா.சிறிநேசன் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன், முன்னாள் மாவட்டச் செயலர் மா.உதயகுமார், பிரதேச சபை தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பாளர்கள், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் மகளிர் அமைப்புக்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது கட்சி மகளிர் அணி உறுப்பினர்களின் நிகழ்வுகளும் நடைபெற்றதுடன் சிறப்புரைகளும் இடம்பெற்று மகளிருக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

# திருமலையில் பழைய கழிவு பொருள்களை கொண்டு பல இயந்திரங்கள் கண்டுபிடிப்பு!



திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் 99 ஆம் கட்டை மீராநகர் பகுதியில் பழைய இரும்பு கழிவுப் பொருள்களைக் கொண்டு ஒருவர் பல இயந்திரங்களை உருவாக்கியுள்ளார்.

தம்பலகாமம் 99 ஆம் கட்டை மீரா நகர் பகுதியைச் சேர்ந்த ஏ.பி . அன்வர் என்பவரே இவ்வாறு பல்வேறு வகையான இயந்திரங்களைக் கண்டுபிடித்துள்ளார்.

சுமார் 16 வருடங்களாக இத்தொழிலை செய்து வருவதாகவும் 2009 ஆம் ஆண்டு பல சாதனைகள் பத்திரிகையில் வெளிவந்த போதும் பண வசதி இல்லாமையால் தன்னுடைய சாதனைகள் முடங்கி விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கமோ அல்லது தனியார் நிறுவனமோ எனக்கு நிதி உதவி செய்யுமாக இருந்தால் இன்னும் பல இயந்திரங்களைக் கண்டுபிடிக்க முடியும் எனவும் இந்த விடயங்களுக்கு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட

# தொலைக்காட்சிகள் மற்றும் குளிரூட்டிகள் சுங்கத் திணைக்களத்தினரால் பறிமுதல்!



சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவான தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் குளிரூட்டிகளை சுங்கத் துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் எனக் கூறி இந்தப் பொருள்கள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக, இலங்கை சுங்க மத்திய சரக்கு ஆய்வுப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் 68 தொலைக் காட்சிப் பெட்டிகள், 77 குளிரூட்டிகள், பயன்படுத்தப்பட்ட ரயர்கள் உள்ளிட்ட உபகரணங்கள் இருந்தன எனப் பிரதி சுங்கப் பணிப்பாளர் ஆர்.எஸ்.வீரசிறி தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பயங்கரவாதத்தின் வரையறை

**தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை கொழும்பு அரசு பயங்கரவாதிகள் என்றே குறிப்பிடுகின்றது. அந்த அமைப்பில் இருந்தார்கள், அல்லது அந்த அமைப்பிற்கு உதவி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டவர்களைத் தமிழர்கள் அரசியல் கைதிகள் என்று சொன்னாலும் அரசு இயந்திரங்களும் ஆட்சியாளர்களும் அவர்களைப் பயங்கரவாதிகள் என்றும் பயங்கரவாதச் சந்தேகநபர்கள் என்றும்தான் சொல்கிறார்கள்.**

**அரச தலைவராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவே பல தடவைகள் வெளிநாடுகளில் அரசியல் கைதிகள் என்று யாரும் எம்மிடம் இல்லை, இருப்பவர்கள் எல்லோரும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டதற்காகத் தண்டிக்கப்பட்டவர்கள் அல்லது பயங்கரவாதச் செயலுடன் தொடர்புபட்டவர்கள்தான் என்று வெளிப்படையாகவே கூறியிருக்கிறார்.**

**இப்படி இலங்கை அரசுக்கு எதிராகப் போராடிய–வர்களை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி அடக்குமுறைகளை அரசு கட்டவிழித்துவிட்டபோதெல்லாம், இதனை அனுமதித்துவரும் பௌத்த சிங்களச் சமூகம் ஒருநாள் இதேபோன்று பாதிக்கப்படும் என்கிற எச்சரிக்கையைத் தமிழ்த் சமூகம், தமிழ் அறிவியலாளர்கள் சுட்டிக்காட்டி வந்திருக்கின்றனர்.**

**அதுபற்றி சிங்களப் பெரும்பான்மைச் சமூகம் அலட்டிக்கொண்டதில்லை.**

**நீண்ட காலமாக பௌத்த சிங்களத் மேலாதிக்கத் தரப்புடன் மோதலில் ஈடுபட்டிருக்கும் தமிழ்த் தரப்பு இன்று எங்களுக்கு இருக்கும் இந்தப் பாதிப்பு நாளை உங்களுக்கும் வரும் என்று தொடர்ந்து எச்சரித்து வந்திருக்கின்றது.**

**இன்று அந்த நேரம் வந்திருக்கிறது. அரசுக்கு எதிராகப் போராடுபவர்கள் எல்லோரும் அரசியல் கட்சிகளில் அங்கத்துவம் வகிக்கும் பயங்கரவாதிகள் என்று கூறியிருக்கிறார் மின்சக்தி வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன வியசேகர.**

**“சாதாரண மக்கள் போராட்டத்தில் ஈடுபடவில்லை. அரசியல் கட்சிக்கு ஆதரவாகச் செயற்படும் பயங்கரவாதிகள்தான் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு தடையான போராட்டங்கள் மீது சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் தாக்குதல் மேற்கொள்ள வேண்டும். நாட்டின் பொருளாதார நெருக்கடியை மேன்மேலும் தீவிரப்படுத்தும் வகையில் திட்டமிட்ட வகையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. பொருளாதார முன்னேற்றத்துக்கு தடையான போராட்டங்களுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது” என்று தெரிவித்திருக்கின்றார்.**

**ஆக மொத்தத்தில் இந்த அரசுக்கு எதிராகப் போராடும் சிங்கள மக்கள், மாணவர்கள் எல்லோருமே இனிமேல் பயங்கரவாதிகள்தான். ஆட்சியாளர்கள் சொல்வதைக் கேட்டு அவர்க்ள வீடுகளுக்குள் அடங்கி ஒடுங்கி இருக்கவில்லையாயின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழர்கள் கவனிக்கப்பட்டதைப் போலவே சிங்களவர்களும் கவனிக்கப்படுவார்கள்.**

**பயங்கரவாதம் என்பதற்கு இலங்கையைப் பொறுத்த வரை வரையறை அரசுக்கு எதிராகச் செயற்படுவது மட்டுமே. ஆட்சியாளர்கள் செய்வதைக் கேள்வி கேட்காமல், எதிர்க்காமல் ஏற்றுக்கொள்பவர்களைத் தவிர மற்றைய அனைவருமே பயங்கரவாதிகள்தான் இந்த ஆட்சிக்கு.**

# நாடு வங்குரோத்து அடைய பெரமுனவே முழு பொறுப்பு

## சாகரவுக்கு கபீர் ஹசீம் சாட்டை



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவால்தான் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் வெட்கம் மற்றும் பயம் இல்லாமல் கருத்துரைக்கிறார். நாடு வங்குரோத்து நிலை அடைவதற்கு பொதுஜன பெரமுன பொறுப்புக் கூற வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கலால் சட்டம் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடுமையான தீர்மானங்களை மேற்கொண்டதால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முடியும் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். எரிபொருளின் விலை, மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் வரி வீதமும், வட்டி வீத மும் பன்மடங்கு அதிகிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரசாங்கம் எடுத்த அனைத்து தீர்மானங்களுக்கும் நாட்டு மக்கள் பலியாகியாகியுள்ளார்கள். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களை பணயமாகக் கொண்டு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

ஒட்டுமொத்த மக்க ளும் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபட்டு அரசாங் கத்துக்கு முன்வைத்த கோரிக்கை தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளதா? இல்லை, அரசாங்கம் ஆரம்பத்தில் செயற்பட்டதைப் போன்று தற்போதும் செயற்படுகிறது. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் அமைச்சரவை அமைச்சுக்களின் எண்ணிக்கையும், அமைச்சர்களுக்கான வரபிரசாதங்களும் குறைக்கப்படவில்லை.

அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படவேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியுள்ள நிலையில் ஊழல் மோசடிக்கு எதிரான சட்டமூலத்தை அரசாங்கம் இதுவரை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. மாறாக அரசாங்கம் வழமை போன்று முறையற்ற வகையில் செயற்படுகிறது.

நாடாளுமன்றத்தின் சிறப்பு குழுக்களுக்கு எதிர்க் கட்சிகள் நியமிக்கப்படவேண்டும் என 2015 ஆம் ஆண்டு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு யோசனையை நாடாளுமன்றத்துக்கு முன்வைத்து அதனை நிறைவேற்றினார். ஆனால் அவர் தற்போது அந்த முறைமையை முழுமையாக மீறி ஆளும் தரப்புக்கு ஆதரவாகச் செயற்படுகிறார்.

நாடாளுமன்றத்தின் சிறப்பு குழுக்களான கோப், கோபா மற்றும் அரசாங்க நிதி தொடர்பான தெரிவுகுழுக்களின் தலைவர் பதவிகள் ஆளும் தரப்பிற்கு வழங்கப்பட்டுள்ளன, இவ்வாறான நிலையில் எவ்வாறு தவறுகள் சுட்டிக்காட்டப்படும்.

பொருளாதார நெருக்கடிக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் மாத்திரம் தீர்வுகாண முடியும், நாட்டை முன்னேற்றமடைய செய்ய முடியும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் வெட்கமில்லாமல் கருத்துரைக்கிறார். நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளதற்கு பொது ஜன பெரமுனவும், அதன் தலைவர்களும்தான் பொறுப்புக் கூற வேண்டியவர்கள். - என்றார்.

# கடன்மறுசீரமைப்பு மூலோபாயம் குறித்த அறிவிப்பு ஏப்ரல் மாதத்தில் வெளியாகும்!

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



இலங்கை கடன்மறு சீரமைப்பு மூலோபாயத்தை ஏப்ரல் மாதம் அறிவிக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியம் ஆறுமாதத்துக்கான முழுமையான பிணையெடுக்கும் பொதி தொடர்பாக ஆராய்வதற்கு முன்னர் இலங்கை ஏப்ரல் மாதம் கடன்மறுசீரமைப்பு மூலோபாயத்தை அறிவிக்கும் வர்த்தக கடன்வழங்குநர்களுடன் பேச்சுகளை ஆரம்பிக்கும் என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டருக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நெருக்கடியில் சிக்குண்டுள்ள இலங்கை தனக்கு கடன்வழங்கிய இந்தியா, சீனா உட்பட அனைத்து முக் கிய நாடுகளிடமிருந்தும் நிதி உத்தரவாதங்களை இதுவரை பெற்றுள்ளது.

இதன் காரணமாக சர்வதேச நாணயநிதியம் ஏப்ரல் 20 ஆம் திகதி இலங்கைக்கான நான்குவருட நிதி உதவித் திட்டத்துக்கு அனுமதி வழங்கவுள்ளது என சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

ஏழு தசாப்தகாலத்தில் இலங்கை சந்தித்துள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக அது மேற்கொண்ட பல மாத முயற்சிகளின் விளைவே சர்வதேச நாணயநிதியத்தின் நிதி உதவி.

பணியாளர் மட்ட உடன் படிக்கை வெளியானவுடன் அதனை பார்த்தீர்கள் என்றால் அதில் கடன் மறு சீரமைப்பிற்கான எங்கள் அர்ப்பணிப்பு காணப்படும், அதில் எங்களின் நடுத்தர கால இலக்குகளும் காணப்படும் என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நாங்கள் ஏப்ரல் மாதத்தில் நீண்டகால நடுத்தர இலக்குகளை எப்படி அடையப்போகின்றோம் என்பதை அறிவிப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஏ.சி. திருட்டு பெண் கைது!

வாடகைக்குப் பெறப்பட்ட சொகுசு வீடு ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான குளிரூட்டிகளை திரு டினார் எனக் கூறப்படும் பெண் ஒருவர் கினிகத்தென்ன வீடொன்றில் பதுங்கியிருந்தபோது கைதுசெய்யப்பட்டார் என மலையக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் உரிமையாளரிடமிருந்து கிடைத்த தகவலின் பிரகாரம் இவர் தனது வீட்டுக்குச் சென்று குளிரூட்டிகள் தொடர்பில் ஆராய்ந்தபோது வீட்டில் பொருத்தப்பட்டிருந்த 6 குளிரூட்டிகளும் காணாமல் போயிருந்ததைக் காணமுடிந்ததாக கஹதுடுவ பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதை சந்தேகநபர் அறிந்ததும் அவர் அவரது கிராமமான கினிகத்தென்ன பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்று தலைமறைவாக இருந்துள்ளார்.

இந்நிலையிலேயே சந்தேகநபர் அங்கு வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# சொத்தி உபாலியின் உறவினர் கைத்துப்பாக்கியுடன் கைது!

*வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட நவீன கைத்துப்பாக்கியுடன் பாதாள உலகக் குழுவின் உறுப்பினர் என கூறப்படும் இளைஞர் ஒருவர் கைதுசெய்-யப்பட்டுள்ளார் என பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.*

*சந்தேக நபர் வெலிக்கடை சிறைச்சாலையில் விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ள ஷிரந்த கயான் (சொத்தி உபாலியின் மகன்) என்பவரின் உறவினர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, கொழும்பு, பொரளை பிரதேசத்துக்கு அருகில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*28 வயதுடைய சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி மற்றும் கைத்தொலைபேசி என்பன மேலதிக விசாரணைகளுக்காக பொரளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.*



# மாணவர் மூவர் கைது!


மொரந்துடுவ பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 11ஆம் ஆண்டு கல்வி கற்கும் மாணவர் ஒருவரைக் கொடூரமான முறையில் தாக்கிய குற்றச்சாட்டில் அதே பாடசாலையைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என மொரந்துடுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதே கல்லூரியில் பத்தாவது மற்றும் பன்னிரண்டாம் ஆண்டுகளில் கல்வி பயிலும் மூன்று மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்

தாக்குதலுக்கு உள்ளான மாணவனின் வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதன் காரணமாக நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னதாக தாக்குதலுக்கு உள்ளான மாணவன் மற்றுமொரு மாணவனை தாக்கிய சம்பவம் தொடர்பில் எழுந்த வாக்குவாதமே இந்தத் தாக்குதல் இடம்பெறக் காரணமாக இருந்ததாக பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

# கதிரை திருடிய காவலாளி கைது



மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் உள்ள கதிரைகளை திருடி விற்பனை செய்து வந்த காவலாளி ஒருவரை புதன்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி ஆசிரியர் கலாசாலையில் நிர்வாகம் கதிரை தொடர்பில் கணக்கு எடுத்த போது 6 மரக்கதிரைகள் உட்பட 40 கதிரைகள் காணாமல் போயுள்ளதைக் கண்டு பிடித்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணையில் ஆசிரியர் கலாசாலையில் கடமையாற்றிவரும் 47 வயதுடைய புதூரைச் சேர்ந்த காவலாளி ஒருவரை கைது செய்தனர்.

இவர் தினமும் கடமை முடிந்து வீட்டுக்குச் செல்லும் போது ஒவ்வொரு கதிரைகளை திருடிக் கொண்டு சென்று அந்த பகுதியிலுள்ள கடை ஒன்றில் பிள்ளைக்கு மருந்துவேண்ட பணம் தேவை எனவும் தனது வீட்டுக்கதிரை எனவும் தெரிவித்து பிளாஸ்ரிக கதிரை ஒன்றை 700 ரூபாவுக்கும் மரக்கதிரையை 2 ஆயிரம் ரூபா வீதம் விற்பனை செய்துள்ளார் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து திருடப் பட்டு விற்பனை செய்யப்பட்ட கதிரைகளை மீட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட காவலாளியை நேற்று (வியாழக்கிழமை) மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கைக்கு மேலதிகமாக 66 லட்சம் அமெரிக்க டொலர் வழங்கும் ஜப்பான்!

அவசரகால உணவு மற்றும் ஊட்டச்சத்து உதவிக்காக இலங்கைக்கு மேலதிகமாக 66 லட்சம் அமெரிக்க டொலர்களை ஜப்பான் வழங்குகின்றது.

10 லட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு மிகமுக்கியமான உணவு மற்றும் ஊட்டச்சத்து உதவியை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்துக்கு மேலதிகமாக 66 லட்சம் அமெரிக்க டொலர்களையே இவ்வாறு ஜப்பான் வழங்குகின்றது.

இந்த நிதியுதவியின் மூலம் குடும்பங்களுக்கு அரிசி, பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் அடங்கிய உணவுப் பொதிகளை வழங்கி, அவர்களின் மாதாந்த உணவுத் தேவைகளில் பாதியை இரண்டு மாதங்களுக்குப் பூர்த்தி செய்யும்.

மேலும் இந்த நன்கொடை நான்கு மாத காலத்துக்கு சோளம் மற்றும் சோயா பீன்ஸ் கொள்வனவு மூலம் திரிபோ போன்ற வலுவூட்டப்பட்ட உணவுப் பொருள்களின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும், இது ஊட்டச்சத்து குறைபாட்டால் அதிகளவு பாதிக்கப்படும் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் சிறு குழந்தைகளுக்கு வழங்கப்படும்.

இந்த முக்கிய தருணத்தில் இலங்கைக்கு மேலதிக மனிதநேய உதவியை வழங் குவதற்கு ஜப்பான் அரசாங்கம் தீர்மானித்துள்ளமையை அறிவிப்பதில் நாம் மகிழ்வு கொள்கின்றோம். கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடி தொடங்கியதில் இருந்து ஜப்பான் அரசாங்கத்தால் டபிள்யு.எவ்.பி. மூலம் உணவு உதவியானது மொத்தம்ஒருகோடிஅமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது.

நாடு முழுவதும் முடிந்த அளவு மக்களுக்கு அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அத்தியாவசிய உணவு வழங்கப்படும் என்று நாங்கள் உண்மையிலேயே நம்புகிறோம். - என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிகொசி ஹிதேகி தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பின்மை இன்னும் அதிக அளவில் இருப்பதாக டபிள்யு.எவ். பி. இன் அண்மைய ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

ஒவ்வொரு 10 குடும்பங்களிலும் ஏழு பேர், புரதம் மற்றும் பால் போன்ற சத்தான உணவைக் குறைப்பது அல்லது உணவை முற்றிலுமாகத் தவிர்ப்பது போன்ற எதிர்மறையான சமாளிக்கும் உத்திகளைக் கடைப்பிடிக்கின்றனர் என அது தெரிவிக்கின்றது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களால் பாதிக்கப்பட்டுள்ளபெண்களும் குழந்தைகளுமே எங்களின் மிகப் பெரிய கவலையாகும் - என டபிள்யு.எவ்.பி. இலங்கையின் பிரதிநிதியும் நாட்டுப் பணிப்பாளருமான அப்துர் ரஹீம் சித்திக்கி கூறினார். பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் தங்களுக்குத் தேவையான உணவு மற்றும் ஊட்டச்சத்தைப் பெறும் வகையில் எங்கள் முயற்சிகளை அளவிடுவதற்கு ஜப்பானின் தொடர்ச்சியான ஆதரவிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். - என அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜப்பான் நாடானது இலங்கை அரசாங்கத்திற்கும் டபிள்யு.எவ்.பிக்கும் ஒரு தசாப்தத்துக்கும் மேலாக நீண்டகாலமாக நன்கொடை அளித்து வருகிறது, அவசரநிலைகளில் முக்கியமான உதவிகளை வழங்குகிறது. அதே நேரத்தில் நாட்டில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான நீண்டகால மீட்பு மற்றும் மேம்பாட்டு முயற்சிகளுக்கு ஆதரவளிக்கிறது.

ஜப்பானின் சமீபத்திய நிதியுதவி பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சமூகங்களைப் பாதுகாப்பதற்கு உதவுவதற்காக இலங்கை மக்களுக்கு அதன் ஆதரவின் விரிவாக்கமாகும்.

டபிள்யு.எவ்.பி. ஆனது கடந்த ஆண்டு ஜூன் மாதம் தனது அவசர செயல்பாட்டைத் தொடங்கியதில் இருந்து 20 லட்சத்துக்கும் அதிகமான மக்களைச் சென்றடைந்துள்ளது மற்றும் உணவு மற்றும் ஊட்டச்சத்து உதவி மூலம் 34 லட்சம் மக்களை அடையும் இலக்கை நெருங்கி வருகிறது.

# நிம்மதியாக வீடுகளில் தூங்கி பல மாதங்கள்!

## யானை அச்சுறுத்தலால் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம்



நிம்மதியாக வீடுகளில் தூங்கி பல மாதங்கள் ஆகின்றன. வீதிகளில் இறங்கி போராடுவதை தவிர இனி வேறு வழியில்லை என அம் பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்ணகி கிராமம், கவாடப்பிட்டி, புளியம்பத்தை, மகாசக்திபுரம் உள்ளிட்ட கிராமங்க ளில் வாழும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த கிராமங்களில் யானையின் அச்சுறுத்தல் அதிகரித்துவரும் நிலையில் அங்கு வாழும் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றிணைந்து நேற்று (வியாழக்கிழமை) வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு கூறினர்.

கோளாவில் பிரதேசத்தில் இருந்து பல்வேறு சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஊர்வலமாக விழிப்புணர்வு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்த மக்கள், ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் முன்பாக ஒன்று திரண்டு பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

அதன் பின்னர் அரச உயர் அதிகாரிகளுக்கும், வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுக்கும் கையளிக்கும் வகையிலான மகஜர்களை ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனிடம் ஒப்படைத்துள்ளனர்.

அத்தோடு தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குரிய தீர்வை விரைவில் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது மகஜர்களை பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளர், அந்த மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காண உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இதேவேளை கண்ணகி கிராமத்தில் நாளாந்தம் யானை தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுவரும் நிலையில் இன்று அதிகாலையும் அப்பகுதியில் உள்ள ஒரு வீட்டை உடைத்து சேதப்படுத்தியுள்ளது.

அத்தோடு இரண்டு தினங்களுக்கு முன்னர் கண்ணகி கிராமத்திலும் உள்ள குடியிருப்பு பகுதிகள், பயிரிடப்பட்ட பயிரினங்கள் மற்றும் உடைமைகளை யானை துவம்சம் செய்துள்ளது.

அண்மைக்காலமாக கவடாப்பிட்டி, புளியம்பத்தை, மகாசக்திபுரம், கண்ணகி கிராமம் உள்ளிட்ட அயலில் உள்ள சிறு கிராமங்களிலும் யானைகளின் தொல்லை அதிகரித்து வருவதால், அங்கு வாழும் மக்கள் தூக்கத்தை தொலைத்து வீதிகளில் அலைவதுடன் விவசாயிகளும் அச்சத்தில் உறைந்துபோயுள்ளனர்.

அதேவேளை சில மாதங்களுக்கு முன்னர் கண்ணகி கிராமத்தில் யானையின் தாக்குதலுக்குள்ளாகி பெண்ணொருவர் பலியானதுடன், வயல் பிரதேசத்தில் தாக்கப்பட்ட ஆண் ஒருவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

யானைதாக்குதல்சார்ந்து மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில், இந்த விடயத்தை அரசியல்வாதிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றபோதும், அரசாங்கமோ எந்தவொரு அரசியல்வாதியோ இதுவரை எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, அப்பகுதிகளில் யானைத் தாக்கம் தொடர்பாக அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில், ஒற்றைக்கண் யானை ஒன்றே தொடர்ச்சியாக சேதங்களை ஏற்படுத்தி வருவதாகவும் கூறியுள்ளனர்.

ஆகவே, அந்த ஒற்றைக் கண் யானையை அந்தப் பிரதேசங்களிலிருந்து வெளியேற்ற அரசாங்கமும் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். இல்லையேல், நாங்கள் தொடர்ந்தும் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபடவேண்டியதாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளனர்.




# சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

இலங்கையில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் வேகமாக அதிகரிக்கக்கூடும் என சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் பதிவாகும் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயாளர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை ஏற்கமாட்டேன்!

## ஜனக ரத்நாயக்க திட்டவட்டம்

எந்தவொரு அரசியல் கட்சியிலிருந்தும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்க மாட்டேன் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனகரத்நாயக்கஅரசியல் கட்சிஒன்றின்தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகப்போகிறார்என்றுஅமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்திருந்தார். அவரது கருத்துத் தொடர்பில் பதிலளிக்கும்போதே பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் ஒரு பொதுவான அரசியல்வாதிக்குசிறந்தஉதாரணம்காஞ்சன என ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். அமைச்சரின் அந்தக் கருத்துக்குத் தனது கண்டனத்தையும் தெரிவித்தார்.

அவர்கள் மக்களுக்குக் காட்டுவதற்காக மட்டுமே வேலை செய்கிறார்கள், ஏனென்றால் அவர்களிடம் ஒரு மறைக்கப்பட்ட நிகழ்ச்சிநிரல் உள்ளது. ஆனால் நான் மக்களுக்காக ஓர் உண்மையான நோக்கத்துடன் வேலை செய்கிறேன், அதனை அவர்களால் கூட நம்ப முடியாது - என்று ரத்நாயக்க கூறியுள்ளார்.

## மகளிர் தினத்தை முன்னிட்டு

# பெண்கள் மட்டுமே வழங்கிய சிறப்பு வானூர்தி சேவை



மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களை கௌரவிக்கும் முகமாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் சிறப்பு சேவையொன்றை வழங்கியுள்ளது.

புதன்கிழமை பெண் ஊழியர்களை மட்டுமே கொண்ட விமான சேவையொன்றை இதற்காக நடத்தியது. இந்த விமான சேவை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து திருச்சி வரை முன்னெடுக்கப்பட்டது.

இந்த விமானத்தின் கப்டனாக சாமிக்கா ரூபசிங்க செயற்பட்டார், விமானிகளாக பிமலி ஜயவர்தன மற்றும் ரொஷானி திஸாநாயக்க ஆகியோர் செயற்பட்டனர்.

அத்துடன், உபுலி வர்ணகுல பணிக்குழாம் மேற்பார்வையாளராகவும், லக்மினி திஸாநாயக்க, ஜெயகலனி கின்சன் மற்றும் ஹர்ஷி வல்பொல ஆகியோர் விமான பணிப்பெண்களாகவும் செயற்பட்டுள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.03.202இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை.



நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# ஒழுக்கம் விழுப்பம் தரும்



''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்''

என்பது வள்ளுவர் வாக்கு. மனிதனுடைய வாழ்வில் உயர்வை, வெற்றியை, தோல்வியை ஒழுக்கமே நிர்ணயம் செய்கிறது. சீரிய வாழ்விற்கு சிகரமாக அமைவது சிறந்த ஒழுக்கமே ஆகும் என்று கூறினால் மிகையாகாது. ஒழுக்கம் எப்போதும் மேன்மையைத் தருவதால் அந்த ஒழுக்கமே உயிரினும் மேலானதாகச் சான்றோரால் காக்கப்படுகின்றது.

ஒருவனிடம் எத்தனை செல்வங்கள் இருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் இல்லையெனில் உயர்வும், சிறப்பும் இல்லாமல் போகின்றது. மனிதன் மனிதனாக வாழ்வதே தலைசிறந்த ஒழுக்கம் ஆகும். இதனை நாம் உள்ளத்தில் நன்கு பதித்துக் கொள்ளவேண்டும். பல்வேறு திறமைகளைக் காட்டிலும் பல்வேறு பதவிகளைக் காட்டிலும் ஒருவனுக்கு ஒழுக்கமே சிறந்ததாக வேண்டப்படுகின்றது.

ஒரு குழந்தை பிறந்ததும் அக்குழந்தையின் பெற்றோர் மூலமாகவும் இயற்கை மூலமாகவும் கூர்ந்து கவனிக்கப்படுகின்றது. தன்னைச் சுற்றியுள்ளவர்கள் பேசுகின்ற செயற்பாடுகள் அனைத்தையும் உற்று நோக்கிக் கவனிக்கின்றது. இதனைத் திருவள்ளுவர்

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பி தேரினும் அஃதே துணை .

அதாவது வருத்தியேனும் ஒழுக்கத்தைப் போற்றிக் காக்க வேண்டும். பலவற்றையும் ஆராய்ந்து தெரிந்தாலும் அந்த ஒழுக்கமே உயிருக்குத் துணையாகும்.

உலகம் மதித்துப் போற்றும் வகையில் நாம் வாழவேண்டும். ஏனையவர்கள் எம்மைப் பார்த்து பழிக்கும் வகையில நம் வாழ்வு அமையக்கூடாது. இறந்ததும் வாழ்வதே நம் வாழ்வின் இலட்சியமாக அமையவேண்டும். இறந்தும் வாழவேண்டும் என்றால் இருக்கும்போதே மேன்மையுடையவனாக வாழவேண்டும். இதனை வள்ளுவர் ஒழுக்கம் உடைமை குடிமை இழக்கும் அழிந்த பிறப்பாய் மாறிவிடும் . நாம் ஒழுக்கத்திலிருந்து விடுபட்டால் இழிந்த குடியில் பிறந்தவர்களாகக் கருதப்படுவோம். உண்மை, அன்பு, நேர்மை, தியாகம் என ஒருவரிடம் இருக்கவேண்டிய நற்பண்புகளோடு அவர் தவிர்க்கவேண்டிய பொறாமை, சுயநலம், ஏமாற்று, வஞ்சகம் ஆகிய தீய செயல்களைத் தவிர்த்து நடத்தலும் ஒழுக்கத்தினுள் அடங்கும். ஒழுக்கமானது சிறு வயதிலிருந்து கடைப்பிடிக்கும் பயிற்சியாக அமைய வேண்டும்.

இதனால் அழுக்காறு உடையவன் கண் ஆக்கம் இல்லை எனக் குறிப்பிடுகின்றார். ஒழுக்கத்தில் பாதிப்பு ஏற்பட்டாலும் வாழ்வு குன்றிவிடும்.

பொருள் ஈட்டுவது வாழ்வின் நோக்கமாக இருந்தாலும் அதன் மூலம் புகழ் ஈட்டுவது நமது குறிக்கோளாக இருக்கவேண்டும். பொருள் வழியே புகழ் வளர வேண்டுமானால் ஒழுக்கத்தை உயிரை விட மேலானதாகக் கருத வேண்டும். இதனையே வள்ளுவர் ஒழுக்கத்தின் ஒல்கா உரலோர் என்கிறார்.

பாடசாலைகளில் ஒவ்வொரு ஆசிரியரும் தாம் கற்பிக்கும் மாணவர்களைச் சிறந்த நற்பிரசையாக செயற்படவைத்தல் வேண்டும். நீ எதை மதிக்கின்றாயோ அது உன்னை மதிக்கும் என்பது முதுமொழி. நாமும் ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்கக் கற்றுக்கொள்ள மறந்துவிடக்கூடாது. ஒழுக்கம் இல்லையெனில் தலையிலிருந்து நீங்கிய மயிர்போல் ஆகிவிடும்.

இதற்காகவே எமக்கு ஆத்திசூடி, புதிய ஆத்திசூடி, நாலடியார், திருக்குறள், திரிகடிகம் போன்ற ஒழுக்க நூல்கள் எம்மைச் சுற்றிச் சுற்றி வருகின்றன.




ஒழுக்கத்தில் உயர்ந்த புத்தர், இயேசு, மகாத்மா காந்தி, ஜவகலால் நேரு, அப்துல்கலாம், அன்னை திரேசா போன்றோரின் வாழ்க்கை வரலாற்றைப் புரட்டிப் பார்க்க வேண்டும். அவர்கள் உயர்ந்து நிற்பதைக் கண்டு வியக்கவேண்டும். கிறிஸ்தவர்களது திருவிவிலியம், இந்துக்களின் வேத ஆகமங்கள், இஸ்லாமியரின் திருக்குர்ஆன், பௌத்தர்களின் திரிபீடகம் போன்ற அனைத்துப் புனிதநூல்களுமே வாழ்க்கைப் பண்புகளை அழகாகக் கூறுகின்றன.

பாடசாலைகளில் சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் பேணுவதற்கு சீருடை அணிகின்றோம். வெள்ளிக்கிழமைகளில் விசேடமாக சமய ஆராதனைகள் இடம்பெறுகின்றன. பெரியோரை மதித்தல், அன்பாகப் பழகுதல், ஏழைகளுக்கு உதவுதல், உதவி செய்தல், இயற்கையைப் பேணுதல், ஒழுக்கமாக வாழ்தல் போன்ற விழுமியக் கருத்துக்களைக் கூறும் பாடத்திட்டங்களை உள்ளடக்கிய பாடப்புத்தகங்கள் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்றன. இச்செயற்பாடுகள் எம்மை உலகத்தோடு ஒத்து இயங்க வழிவகுக்கும். இதனையே செந்நாப்புலவர் உலகத்தோடு ஒட்ட ஒழுகல் எனக் கூறுகின்றார்.


நீங்கள் கீதைச்சுலோகங்களை மனப்பாடம் செய்வதால் மட்டும் நான் மகிழ்ந்து விடமாட்டேன். வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் ஆகியவற்றைப் பயின்றாலும் பயிலாவிட்டாலும் எனக்குக் கவலையில்லை. ஆனால் முக்கியமாக ஒழுக்கம் பயில வேண்டும் என மாணவர்களுக்கு உபதேசித்தார் காந்தியடிகள்.

“எல்லாக் குழந்தைகளும் நல்லகுழந்தைகள் மண்ணில் பிறக்கையிலே'' மனிதன் யாரும் தவறு செய்யவில்லை சரி, தவறு தெரியாமலே தவறு செய்துகொண்டிருக்கிறான் என்ற ஒழுக்கவியலின் தந்தை சோக்கிரடீற்றின் கருத்தை நாம் அனைவரும் கேட்டுக்கொள்ள வேண்டும்.

அனைவரும் சிறந்த ஒழுக்கமுள்ளவர்களாக வாழ்ந்து நமது வீட்டிற்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும், உலகிற்கும் நற்பெயர் எடுத்துக்கொடுப்போமாக.

“நல்ல பெயரை வாங்க வேண்டும் பிள்ளைகளே. நம் நாடு எனும் தோட்டத்திலே நாளைமலரும் முல்லைகளே”.

# உதவி செய்தல்



ஒரு அரசன் மாறுவேடத்தில் நகர்வலம் வந்து கொண்டிருந்தான். நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருந்தது. அப்போது வயாதான ஏழை ஒருவன் மிகுந்த சிரமப்பட்டுக் கரி மூட்டை ஒன்றைச் சுமந்துகொண்டு தள்ளாடித் தள்ளாடி வந்துகொண்டிருந்தான். அரசன் அவனை நிறுத்தி அவனைப்பற்றி விசாரித்தான். பிள்ளைகள் யாருமில்லை. உதவிக்கும் யாருமில்லை. படிப்பு வாசனை அவனுக்கோ அவன் மனைவிக்கோ இல்லை. அன்றாடம் விறகு எரித்துக் கரி விற்பனை செய்யும் வருமானத்திற்தான் சீவியம் நடத்துவதாகவும் ஒரு நாள் வாழ்வு கழிவதே பெரும் பாடாக உள்ளதாகக் கூறிய அந்த முதியவரின் வார்த்தைகள் மாறுவேடத்தில் வந்த அரசனை நெகிழச் செய்துவிட்டது.

அரசன் தன்னை யாரென்று அடையாளம் காட் டிக்கொள்ளவில்லை. சற்றுப் பொறுக்கும்படி அந்த முதியவரிடம் சொல்லிவிட்டுச் சற்று நேரத்திற் திரும்பி வந்து அரச இலட்சனை பொறிக்கப்பட்டு எழுதப்பட்ட ஓலை ஒன்றை அந்த முதியவருக்குக் கொடுத்து இது சந்தனமரங்கள் வளர்ந்துள்ள சிறிய காணித்துண்டு. இன்றிலிருந்து இது உனக்குத் தான் சொந்தம். இது இன்ன இடத்திற்தான் உள்ளது. இனிமேல் நிம்மதியாகச் சீவியம் நடத்தலாம் என்று கூறி அம் முதியவரை வழியனுப்பி வைத்தான். இனி அந்தக் குடிமகன்கள் குடும்பம் நிம்மதியாக வாழும் என்று நிம்மதிப் பெருமூச்சுவிட்டபடி அரண்மனைக்குச் சென்றான்.

மாதங்கள் சில உருண்டோடின. ஒருநாள் அரசன் மாறு வேடத்தில் உலாவந்து கொண்டிருந்தவன் திகைத்துப் போனான். சில மாதங்களுக்கு முன்பு சந்தித்த அதே முதியவர் கரி மூட்டையோடு தள்ளாடித் தள்ளாடி நடந்தபடி வந்துகொண்டிருந்தார். கிட்டப்போய் விசாரித்தான் அரசன். முன்பு கூறிய அதே விசயங்களைக் கூறிய அம் முதியவர் மேலும் சில மாதங்களுக்கு முன்பு யாரோ ஒரு புண்ணியவான் இருபது வளர்ந்த சந்தனமரங்கள் கொண்ட காணி ஒன்றை இனாமாகத் தந்தார். அதனால் கரி எடுக்க அலைந்து திரிய வேண்டியிருக்கவில்லை. சந்தன மரங்களை வெட்டிக் கரியாக்கிச் சீவியம் நடத்த இலகுவாக இருந்தது. அந்தப் புண்ணியவான் எங்கிருந்தாலும் நல்லா இருக்கவேணும் – என்று வாழ்த்திக்கொண்டே அப்பாற் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றார்.

அரசன் அரண்மனை செல்லும்வரை திகைப்பிலிருந்து மீளவில்லை.

மாணவர்களே! உதவி செய்யுங்கள். நீங்கள் செய்யும் உதவி பயன்படுகிறதா? வீணடிக்கப்படுகிறதா? என்பதையும் அவ்வப்போது அவதானியுங்கள். இன்று பலராற் செய்யப்படும் உதவிகள் விழலுக்கிறைத்த நீராகப் போகின்ற அவலங்களும் நடந்துகொண்டிருக்கின்றன.

# இன்று நான்படித்ததை பகிர்கின்றேன்



ஒரு முறை மகாகவி காளிதாசர் வயல்வெளியே வெயிலில் நடந்து சென்ற போது தாகம் எடுத்தது..!

சற்று தூரத்தில் ஒரு கிராமப்பெண் கிணற்றில் தண்ணீர் சேந்தி குடத்தில் எடுத்து வந்து கொண்டிருந்தாள்!

காளிதாசர் அவரைப் பார்த்து அம்மா தாகமாக இருக்கு...

கொஞ்சம் தண்ணீர் தருவீர்களா? என்று கேட்டார்.....

அந்த கிராமத்துப் பெண்ணும் தருகிறேன் உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள் என்றாள்!

உடனே காளிதாசருக்கு ஒரு உயர்வு மனப்பான்மை ஏற்பட்டு இந்த பெண்ணிடம் நாம் யார் என்று சொல்ல வேண்டுமா என நினைத்து நான் ஒரு பயணி அம்மா என்றார்!

உடன் அந்த பெண் உலகில் இரண்டு பயணிகள் தான்!

ஒருவர் சந்திரன்!

ஒருவர் சூரியன்!

இவர்கள் தான் இரவு பகலென பயணிப்பவர்கள் என்றாள்.....!

சரி என்னை விருந்தினர் என்று வைத்துக் கொள் என்றார் காளிதாசர்!

உடனே அந்தப் பெண் உலகில் இரண்டு விருந்தினர் தான்!

ஒன்று செல்வம்!

இரண்டு இளமை!

இவை இரண்டும் தான் விருந்தினராக வந்து உடனே போய் விடும் என்றாள்!

சற்று எரிச்சலான காளிதாசர் தான் ஒரு பொறுமைசாலி என்றார்! ....

உடனே அந்த பெண் அதுவும் இரண்டு பேர்தான்...!

ஒன்று பூமி!

எவ்வளவு மிதித்தாலும் எவர் மிதித்தாலும் தாங்கும்!

மற்றொன்று மரம்!

யார் கல்லால் அடித்தாலும் பொறுத்துக் கொண்டு காய்களைக் கொடுக்கும் என்றாள்!

சற்று கோபமடைந்த காளிதாசர் நான் ஒரு பிடிவாதக்காரன் என்றார்!

அதற்கும் அந்த பெண் உலகிலேயே பிடிவாதக் காரர்கள் இரண்டு பேர் தான்...

ஒன்று முடி!

மற்றொன்று நகம்!

இரண்டும் எத்தனை முறை வேண்டாம் என்று வெட்டினாலும் பிடிவாதமாக வளரும் என்றாள் சிரித்தபடி!....

தாகம் அதிகரிக்கவே நான் ஒரு முட்டாள் என்று தன்னை கூறிக்கொண்டார்!

உடனே அந்த பெண் உலகிலேயே இரண்டு முட்டாள்கள் தான்!

ஒருவன் நாட்டை ஆளத்தெரியாத அரசன்

மற்றவன் அவனுக்குத் துதிபாடும் அமைச்சன்! என்றாள்! ...

காளிதாசர் செய்வதறியாது அந்த பெண்ணின் காலில் விழுந்தார்!

உடனே அந்த பெண் மகனே... எழுந்திரு... என்றதும் நிமிர்ந்து பார்த்த காளிதாசர் மலைத்துப்போனார்!

சாட்சாத் சரஸ்வதி தேவியே அவர் முன் நின்றாள்!

காளிதாசர் கைகூப்பி வணங்கியதும் தேவிதாசரைப் பார்த்து... காளிதாசா! எவன் ஒருவன் தன்னை மனிதன் என்று உணர்கின்றானோ அவனே மனிதப்பிறவியின் உச்சத்தை அடைகிறான்!

“நீ மனிதனாகவே இரு” என்று கூறி தண்ணீர் குடத்தை காளிதாசர் கையில் கொடுத்து சரஸ்வதி தேவி மறைந்தாள்...!

இதுபோலத்தான் குழந்தைகள் எதிர்காலத்தில் பணம் சம்பாதிக்கவும் இ வசதியாக வாழவும் பெற்றோர்கள் கற்றுக் கொடுக்கிறார்களே தவிர மனிதனாக, தாய், தந்தை மனைவி, மக்கள், உற்றார் உறவினருக்கு, நம் தாய் நாட்டிற்கு, நமக்கு உணவு தரும் பூமிக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் கற்றுத் தரவேண்டும்!

பெற்றோரை தாய் நாட்டை, உறவுகளை பிரிந்து, ஏசி அறையே உலகம், கைபேசியே உறவு, பணம் சம்பாதிப்பதே வாழ்க்கையென வாழ்க்கையை இயந்திர மயமாக்கி மனித நேயமில்லா வாழ்க்கை வாழக் கூடாது!

நீ நீயாகவே மனிதனாகவே இரு இ வாழ்க வளமுடன் மனிதநேயம் மலர மகிழ்வித்து மகிழ்.....

**சிவஸ்ரீ. நாதன் குருக்கள்**
**ஆஸ்திரேலியா**

# சாட்சிக்காரன் காலில் விழுவதை விட...

## அக்கரை அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

எப்போதெல்லாம், இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவின் பங்களிப்பு என்ற பேச்சு எழுகிறதோ, அப்போதெல்லாம், அந்த பேச்சு வலுக்கட்டாயமாக இந்தியாவின் அயல் நாட்டு மற்றும் பாதுகாப்பு கொள்கைகள் குறித்துத் திருப்பப்படுகிறது. இது, இலங்கை தமிழ் அறிவு ஜீவிகள், அவர்களது புலம்பெயர்ந்த சகோதரர்கள் மற்றும் தமிழ் நாட்டில் இருக்கும் அவர்களது புல்லாங்குழல்கள் அல்லது ஒத்து ஊதுவோரால் பரப்பப்படுகிறது. அவர்களே இதனை நம்புகிறார்களா, என்பது வேறு விடயம். அண்மை காலத்திலும் இதுவே நிகழ்ந்தது.

அந்த விதத்தில், இனப்பிரச்சினையில் இந்தியாவின் பங்களிப்பு தொடங்கியது எண்பதுகளின் முதல் பாதியில், அவர்களை பொறுத்த வரையில், இந்தியாவிற்கான அச்சுறுத்தல் பாகிஸ்தானிடம் இருந்து வந்தது. தற்போதைய மாறுபட்ட சர்வதேச அரசியல் மற்றும் பிராந்திய பாதுகாப்பு சூழலில், இந்தியாவிற்கு, சீனாவே முக்கிய அச்சுறுத்தலாக இருக்கிறது என்பது அவர்களது கணிப்பு. இது உண்மையும்கூட. ஏன், இது மட்டுமே உண்மை.

ஆனால், இதனை அடிப்படையாக கொண்டு, சீனாவை ஆதரிக்கும் தென்னிலங்கைக்கு செக் வைக்க இந்தியாவிற்கு, தமிழர் தரப்பை விட்டால், வேறு வழி இல்லை என்பது போன்ற கணக்குகளை போட்டுப்போட்டு, தமிழ்த் தரப்பினர் மாய்ந்து போய்விட்டார்கள் என்பதுதான் மிச்சம். ஆனால் உண்மை அதுவல்ல. இந்தியாவை போன்ற ஒரு பலம் மிக்க பிராந்திய சக்தி, தனி நபர்களையும் அவர்கள் தலைமையிலான குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகளையும் நம்பி சர்வதேச அரசியலில் இறங்க முடியாது. இறங்காது.

### மரத்தடி ஜோதிடர்

அவ்வாறே, இவர்கள் கூறியது போலவே, இந்தியா செயல்பட்டதாகவே வைத்துக்கொள்வோம். அதுவெல்லாம், கறுப்பு ஜூலை காலத்திய சிந்தனையாகவே கொள்ளவேண்டும். அந்த காலகட்டத்தில், இலங்கை வாழ் தமிழர்கள் தங்களை தாங்களே பாதுகாத்துக் கொள்ள ஆவன செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் மட்டுமே, இந்தியா தமிழ்ப் போராளி குழுக்களுக்கு ஆதரவு கொடுத்தது. ஆயுதங்களும் கொடுத்தது.

அப்போது போராளிக் குழுக்களில் பங்கு பெற்றவர்களை கேட்டால், அவர்களுக்கு நன்றகவே ஒரு விடயம் இப்போதாவது தெளிவாகி இருக்கும். இந்தியா, போராளி குழுக்களுக்கு அளித்தது எல்லாம், தற்காப்பு ஆயுதங்களே தவிர, இலங்கை இராணுவத்துடன் முழு மூச்சுடன் போராடுவதற்கான ஆயுதங்கள் அல்ல. அவற்றை, குறிப்பாக விடுதலை புலிகள் இயக்கம் தானாகவே, வேறு இடங்களில் இருந்து, முயன்று பெற்றுக்கொண்டது.

இதுவெல்லாம் எப்படியேனும் போகட்டும். எப்போது, இந்திய அமைதி படையினருடன் விடுதலை புலிகள் போராடினார்களோ, எப்போது அவர்கள் படு பயங்கரமாக ராஜீவ் காந்தி படுகொலையை அரங்கேற்றினார்களோ, அப்போதே தமிழர் தரப்பு இந்தியாவின் ஆதரவை சுத்தமாகவே இழந்துவிட்டது என்பதே உண்மை. அது போன்ற செயல்களுக்கு, தமிழரின் அனைத்து தரப்பினரும் விடுதலை புலிகளுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்பதும் மறுப்பதற்கோ, மறப்பதற்கோ உரிய தல்ல.

என்றாலும், இலங்கையில் வாழும் தமிழர்கள் ஆகட்டும், அல்லது அவர்களது புலம்பெயர்ந்த உறவுகள் ஆகட்டும், அவர்களிடையே உள்ள அறிவு ஜீவிகளின் முக்கிய பணியே, தாங்கள் தங்களது தவறுகளை எவ்வாறு திருத்திக்கொள்வது என்று யோசிப்பது அல்ல. மாறாக, இந்தியாவின், இலங்கை சார்ந்த அயலுறவு கொள்கையில் என்னென்ன மாற்றங்கள் தேவை, என்று அறிவுரை கூறுவதையே தங்களது தலையாயா கடக்மையாக கொண்டு கடந்த சில – பல தசாம்சங்களாக செயலாற்றி வருகிறார்கள். உண்மையில், அவர்கள் எந்த விதத்திலும் செயலாற்றாமல், மரத்தடி ஜோதிடர் போல், இந்தியாவிற்கு அறிவுரை கூறி வருவதை வழக்கமாக கொண்டிருக்கிறார்கள்.

### பகடைகாய் அரசியல்

இது, அவர்களை சிறுமைபடுத்துவதற்காக கூறப்படுவது அல்ல. மாறாக, உண்மை நிலையை அவர்கள் புரிந்து செயல்படவேண்டும் என்பதற்காகச் சொல்லப்படுவது. இந்தியா ஓர் அண்டை நாடு. சமகால புவி சார் அரசியலில் முக்கிய பங்கு வகிக்கும் தெற்காசிய சக்தி. அதனுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் பிரச்சினைகளும், தேவைகளும், ஏன், நிர்பந்தங்களும்கூட மிகக் குறைவே.

இலங்கையின் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும், அது புவிசார் அரசியலின் ஒரு அங்கம் அல்ல. மாறாக, பல தசாப்தங்களாக அரச தலைமைகள் எடுத்த தவறான கொள்கை முடிவுகள் மற்றும் செயல்பாடுகளின் ஒட்டுமொத்த பிரதிபலிப்பே. இதில், அண்டை நாடான இந்தியா, இலங்கை மக்களின் நிலைமையை கருத்தில் கொண்டு, உடனடி உதவிகளைச் செய்தது மட்டுமே, அந்த நாடு பிராந்திய சக்தியாக தன் கடமைகளை நிறைவேற்றியதற்கு அத்தாட்சி.

அந்த விதத்தில், இனப்பிரச்சினை கூட இந்தியாவிற்கு நேரடியான கவலை கொடுக்கும் விடயமல்ல. ஏன், பலரும் நினைத்து செயல்படுவது போல், தமிழ் நாடு அரசியல் சார்ந்த விடயமும் அல்ல. இன்னும் சொல்லப்போனால், இனப்போரின் உச்சக்கட்டத்தில் அரங்கேறிய இந்திய நாடாளுமன்ற மக்களவைக்கான தேர்தலில்கூட, விடுதலை புலிகள் இயக்க ஆதரவாளரான வைகோ, தனது சொந்த தொகுதியிலேயே நிரம்ப வாக்கு வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார்.

அதற்கு முந்தைய தசாப்தத்தில், ராஜீவ் காந்தி படுகொலை சம்பவ காலத்தில் நிகழ்ந்த தேர்தலில், விடுதலை புலிகள் இயக்கத்திற்கு மறைமுக ஆதரவு வழங்கினார்கள் என்ற ஒரே சந்தேகத்தில் திராவிட முன்னேற்ற கழக வேட்பாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டார்கள். அப்போது, நடைபெற்ற 1991ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றம் மற்றும் தமிழ் நாடு சட்டமன்றம் ஆகிய இரண்டு தேர்தல்களிலும், திமுக படுதோல்வி அடைந்தது.

அந்த வகையில், வேலுப்பிள்ளை பிரபாகரன், தமிழ் நாட்டு மக்களின் உண்மையான எண்ணவோட்டங்களை சரியாக கணக்கிட்டு செயல்படாதது துர்பாக்கியமே. தமிழ் நாட்டு வாக்காளர்களை பொறுத்தவரையில், அல்லலுறும் மக்களுக்கு ஆவன செய்ய வேண்டும் என்பது ஒரு விடயம். ஆனால், அந்த மக்களின் உள்வீட்டு பிரச்சினைகளைத் தனதாக்கிக் கொண்டு, அதனை உள்நாட்டு தேர்தல் அரசியலில் பகடைகாய் ஆக்க முயன்றவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதும், வாக்களிப்பதும் வேறு.

### சொந்த மூளையை...

இன்றளவும், இனப்பிரச்சனையின் அடி நாதத்தில், தமிழர் ஆதரவு நிலை எடுக்கும் தமிழ் நாட்டு மக்களும் அங்குள்ள முக்கிய அரசியல் கட்சிகளும், அதற்காக தங்களது சொந்த மூளையை அடகு வைத்துவிட்டார்கள் என்ற பேச்சிற்கே இடமில்லை. அதாவது, இலங்கை தமிழர் தரப்பு இழுக்கும் இழுப்பிற்கு எல்லாம், தமிழ் நாடு விட்டுக்கொடுக்கும், அல்லது, அவர்களை தங்களது இஷ்டத்திற்கு ஆட்டி பஷ்டைக்கலாம், என்றெல்லாம் முன்பு விடுதலை புலிகள் தப்பு கணக்கு போட்டார்கள்.

அதற்கு, அதீத விலையையும் கொடுத்தார்கள். அதே மாதிரியான தப்பு கணக்கை, மீண்டும் மீண்டும். தமிழ் அரசியல் தலைமைகளும் அறிவுஜீவிகளும் போட்டு வருகின்றன என்பதே கவலைக்குரிய விடயம். வடிவேலு கூறுவது போல், ஏம் போட்டு தான் யோசிப்பாங்களோ!

அந்த வகையில், தமிழ் நாட்டு அரசியலின் நெளிவுசுளிவுகளை, இந்தியாவின் மத்திய அரசு, நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறது. அதனை இலங்கை தமிழ் தரப்புகள்தான் புரிந்து நடப்பதில்லை. நல்ல மாட்டுக்கு மட்டுமல்ல, நல்ல பூனைக்கும் ஒரு சூடு. எப்போது, பால், நாக்கை சுட்டதோ, அப்போதே, அந்த சூட்டின் தாக்கத்தை, வீரியத்தை அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

அவ்வாறு உணர்ந்து செயல்படாததாலே, இலங்கை தமிழர் தரப்பு, கடந்த தசாப்தங்களில், தங்கள் ஆதரவு நிலை எடுக்கும் தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களுக்கு அந்த மாநில மக்களின் போராதரவு இருப்பதாக, தாங்களே நினைத்துக் கொண்டு, தங்களை தாங்களே ஏமாற்றிக் கொண்டு வருகிறார்கள். தங்களது குட்டு உடையும்போது, தமிழ் நாட்டில் தங்களது ஆதரவு தலைமையை பழித்து, பகைத்து உதறி விட்டு, புதிதாக வேறு யாரையேனும் தேடி, அவர்களிடம் தங்களது இந்தியா சார்ந்த அரசியலை அடகு வைக்கிறார்கள். இது தானே, தொடர்ந்து நடைபெற்று வருகிறது?

### ஏட்டிக்கு போட்டி

அண்மைக் காலங்களில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், சீனாவின் ஆதிக்கம் அதிகமாக இருப்பதாக கருதப்படுகிறது. அல்லது, அதற்கு கொழும்புவில் உள்ள சீன தூதரகம் விடா முயற்சி செய்து வருகிறது. அதற்காக, யாழ்பாணத்தில், சில மக்கள் குழுக்களுக்கு சில்லறை உதவிகளை செய்தும் வருகிறது. இங்கு பல்வேறு துறைகளில் தொடர்ந்து முயற்சித்து, பெரும்பாலும் தோல்வியையே தழுவி வருகிறது.

இதன் காரணமாக, இந்தியா தங்களை அண்டி அரசியல் செய்வதை தவிர வேறு வழி இல்லை, என்ற அளவிற்கு சில தமிழர் தலைமைகள், இல்லாத ஊருக்கு வழி சொல்கின்றன. இந்தியாவை பொறுத்த வரையில், எப்போது, விடுதலை புலிகள் இயக்கம் மற்றும் பிற தமிழர் தரப்புகள் தனது முதுகில் குத்தியதோ, அப்போதே அது தனது அணுகுமுறையை மாற்றிக்கொண்டுவிட்டது. அதாவது, சாட்சிகாரன் காலில் விழுவதை விட, சண்டைகாரன் காலில் விழுவதே மேல்...

இதற்காக, இந்தியா, தென்னிலங்கை அரசிடம் பயப்படுகிறதா என்றால், இல்லை. அதற்காக, விழுந்தடித்துக் கொண்டு, சீனாவுடன் ஏட்டிக்கு – போட்டியாக இலங்கை அரசிற்கு உதவிகளை அள்ளி – அள்ளி கொடுக்கிறதா என்றால், இல்லவே இல்லை. ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும்என்பதனை இந்தியா அறிந்தே உள்ளது. அதைவிட முக்கியம், ஆடி கறக்கிற மாட்டை ஆடி கறக்கவும், பாடி கறக்க வேண்டிய மாட்டை, பாடி கறக்கவும் இந்தியா நன்றாகவே தெரிந்து வைத்துள்ளது.

இந்திய அரசியல் மற்றும் அயலுறவுக் கொள்கை குறித்து, தமிழர் தரப்பு ஒரு விடயத்தை நன்றாகவே புரிந்து கொள்ள வேண்டும். பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பாரதீய ஜனதா அரசு பதவியேற்ற காலம் தொடங்கி, முந்தைய காங்கிரஸ் மற்றும் பிற அரசு தலைமைகளின் அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளை பல்வேறாக மாற்றி இருக்கிறது. தூக்கி எறிந்தும் உள்ளது.

ஆனால், இன்று வரை, கடந்த ஐம்பது வருடங்களாக, ஆட்சி மாறினாலும் காட்சி மாறாத இந்திய அரசின் கொள்கை ஒன்று உள்ளது. அது, இனப்பிரச்சினை சார்ந்த விடயம். ஒருமித்த இலங்கையில் தமிழர்களின் அபிலாகைளுக்கான தீர்வுக்கே இந்தியா ஆதரவு கொடுத்து வந்துள்ளது. இந்திய அமைதி படை மற்றும் ராஜீவ் காந்தி படுகொலை காலம் தொடங்கி, விடுதலைபுலிகள் இயக்கம் காணாமல் போனது வரை, இனப்பிரச்சினையில் இடைபடாத இந்தியா, கடந்த பதிமூன்று ஆண்டுகளாக தான், தமிழர் பிரச்சினையை தனது பிரச்சனையாகவே கருதி அதற்கான விடையை பெற்று கொடுக்க முயற்சி செய்து வருகிறது.

அதனை காரணம் காட்டி, உள்ளே ஒன்று, வெளியே ஒன்று என்று பதிமூன்றாவது திருத்தம் துவங்கி பல்வேறு விடயங்களில் மாறிமாறி கருத்து கூறும் பிரகஸ்பதிகள் இனியாவது, இவற்றை புரிந்து கொண்டு, தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.03.2023இல் வெளியிடப்பெற்றது.


# நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.


பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 25 வியாழக்கிழமை 09.03.2023 கதிர் 372


## ரூபாவின் பெறுமதி மீண்டும் அதிகரிப்பு



அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி இன்று மீண்டும் வலுப்பெற்றது.

டொலரின் கொள்வனவு விலை 307.36 ரூபாயாகவும், விற்பனை விலை 325.52 ரூபாயாகவும் 2



## ரணிலும் சஜித்தும் இணையவேண்டும்

### மயந்தவின் கனவு

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் மீண்டும் ஒன்றிணைய வேண்டும் என்பதே எனது கனவு.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளுங்கட்சி மற் றும் எதிர்க்கட்சி எனப் பார்த்துக்கொண்டிருப்பதைவிடவும் நாட்டுக்காக சேவை செய்யக் கூடிய நேரமே இது. அதனால்தான் பொது இணக்கப்பாட்டுடன் நிதி பற்றிய குழுவின் தலைமைப் பதவியை ஏற்கத் தீர்மானித்தேன்.

ஹர்ஷ டி சில்வாவுக்கு தலைமைப்பதவி கிடைக்காது என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் நான் ஏற்றேன். பின்னர் பதவி விலகிவிட்டேன். ஆனால், ஆளுங்கட்சி எம்.பி. ஒருவர் தலைவராகச் செயற்படும் நிலை உருவாகியுள்ளது.

எனக்கு கட்சி மாறும் எண்ணம் இல்லை. ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாஸவும் இணைய வேண்டும் என்பதே எனது கனவு.

தப்த் தவறியேனும் ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தால் நாட்டுக்கு ஆபத்து. எனவேதான் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இணைய வேண்டும் எனக் கூறுகின்றேன் – என்றார்.

### 40 தொழிற் சங்கங்கள் போராட்டத்தில் குதிப்பு

# அத்தியாவசியச் சேவைகள் முற்றாக முடங்கும் அபாயம்




நாடாளவியரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையில் 40 தொழிற்சங்கங்கள் இன்று குதித்துள்ளன.

இதனால் நாடு முழுவதும் அத்தியாவசியச் சேவைகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக அவதானிகள் எச்சரிக்கின்றனர்.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக கல்வி, சுகாதாரம் மற்றும் அரச நிர்வாகத்துறைகள் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளன.

இதனால் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாது நெருக்கடிளுக்கு முகங்கொடுத்துள்ளனர். 2

## சிவன் ஆலயம் இடிக்கப்பட்டது இனவாதத்தின் எடுத்துக்காட்டு

### அருட்தந்தை சத்திவேல் காட்டம்



சிவன் ஆலயம் இடிக் கப்பட்டு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டமை இனவாதத்தையே காட்டி நிற்கின்றது என மலையக சமூக ஆய்வு மையத்தின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்தார்.

அவரால் இன்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் போர்த்துக்கீசர் கால மிக தொன்மை வாய்ந்த கீரிமலை சிவன் ஆலயம் இடிக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டுள்ளது. இது இனவாத, மதவாத அரச பயங்கரவாதத்தினதும் அதற்குத் துணை நிற்கும் இயந்திரமான இராணுவத்தினதும் கொடூர முகத்தை மீண்டும் உறுதி செய்துள்ளது.

இத்தகைய நாகரிகம் அற்ற செயலை மலையக சமூக ஆய்வு மையம் மற்றும் மலையகத் தமிழர் பண்பாட்டுப் பேரவை என்பன வன்மையாகக் கண்டிப்பதோடு துன்புற்றிருக்கும் மக்களின் வேதனையோடு நாமும் நிற்கின்றோம் எனக் கூறுகின்றோம். அரசு இந்து மக்களிடத்தும், தமிழ் மக்களிடத்தும் இந்தச் செயல் தொடர்பாக மன்னிப்புக் கோருவதோடு அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகையை அகற்றி அங்கு இந்து மக்களின் சுதந்திர வழிபாட்டுக்கும் இடம் அளிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசம் என்பது பாதுகாப்பான பிரதேசம் என்று பொருள்படும். அத்தகைய பிரதேசத்தில் பயங்கரவாதச் செயலுக்கு இடம் உண்டா? இராணுவத்தேவைக்கு அப்பால் கட்டடம் நிர்மாணிக்கப்படுமாயின் அதற்கு அனுமதி அளித்தது யார்? அத்தகைய கட்டடம் அமைக்கத் தொன்மை வாய்ந்த இந்து ஆலயத்தை அழிப்பதற்கு அனுமதி அளித்தது யார்? தொல்லியல் திணைக்களம் அனுமதி அளித்ததா? எத்தகைய அனுமதியும் இல்லாத கட்டடம் அமைக்கப்பட்டு தொன்மை வாய்ந்த ஆலயம் அழிக்கப்பட்டிருப்பின் அவ்வாறு செய்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும். அவ்வாறு நீதியின் முன் நிறுத்தப்படுவார்களா? நிறுத்தப்பட்டாலும் நீதி கிடைக்குமா? என்பதே எம்மைச் சூழ்ந்துள்ள கேள்விகள்.

வடக்கு, கிழக்கின் பிரதேசங் களைத் தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்த முனைவதும், சிங்கள பௌத்த பிரதேசங்களாக அடையாளப்படுத்த முனைவதும் நாம் அறிந்ததே.

நாட்டின் எல்லாச் சந்திகளிலும், உயர்ந்த மலைகளிலும் புத்தர் சிலைகளை அமைக்கும திட்டமிட்ட செயல் தொடர்கின்றது.

மலையகப்பிரதேசதந்தை ஆக்கிரமிக்கும் நோக்கில் இந்தச் செயற்பாடு 2

## கட்சி தாவிய 16 பேர் மீது தமிழ் அரசு கிடுக்கிப் பிடி

யாழ்ப்பாணம், மார்.10

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினராக உள்ளபோதும் பிற கட்சிகளின் வேட்பு மனுவில் போட்டியிடும் 16 பேரை ஏன் கட்சியில் இருந்துநீக்ககூடாது எனவிளக்கம் கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிரந்தர உறுப்பினராக இருந்துகொண்டு பிற கட்சிகளில் போட்டியிடும் உறுப்பினர்களிடமே முதல் நடவடிக்கையாக விளக்கம் கோரப்பட்டுள்ளது.

இவ்வாறுகட்சியில்இருந்து விலக்கும் நடவடிக்கையில் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் இராமலிங்கம் இராகினி உட்பட 16 உறுப்பினர்களிற்கு கட்சியின் செயலாளரினால் விளக்கம் கோரல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்குப் பகுதியை சேர்ந்த உள்ளூராட்சிச் சபைகளில் தற்போது அங்கம் வகிக்கும் உறுப்பினர்களிற்கே கட்சியானால் இவ்வாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களிற்கு 14 நாள்களிற்குள் விளக்கமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## தேர்தலைப் பிற்போட்டால் சட்ட நடவடிக்கை நிச்சயம்

### மனித உரிமைகள் ஆணைக்குழு எச்சரிக்கை

ஏப்ரல் 25ஆம் திகதி நடக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலைப் பிற்போட்டால் அதற்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்தது.

மனித உரிமைகள் ஆணையாளர் கலாநிதி விஜித நாணயக்கார இதனைத் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

''தேர்தல் என்பது மக்களுக்கு இருக்கின்ற ஜனா நாயக உரிமையாகும். அதனை எந்த வகையில் இல்லாது செய்யப்படுவதை அனுமதிக்க முடியாது – என்றார் அவர்.

## சவரம் செய்யும் கத்தியால் மகனை வெட்டிய தந்தை!

### 23 வரை விளக்கமறியலில்



சவரம் செய்யும் சிகையலங்கார கத்தியால் மகனை வெட்டிய தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் பசறையில் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டிருக்கும் நபர் பதுளை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி வரை 2

## நிலாவரை விபத்தில் முதியவர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம் நிலவரை பகுதியில் இடம்படற்ற விபத்தில் முதியவர் உயிரிழந்தார்.

நிலாவரைப் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த போது எதிரில் வந்த டிப்பர் வாகனம் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுப்பிட்டி மேற்கை சேர்ந்த சுப்பையா இரத்தின சிங்கம் (வயது 63) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்து தொடர்பில் அச்சுவேலிப் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## களனிப் பல்கலை மாணவர்கள் அறுவர் கைது

(தன்வீன்)

களனிப் பல்கலைக்கழத்திற்கு முன்னால் நேற்றிரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக களனிப் பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னதாக, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள களனி பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் கெலும் முதன்நாயக்க மற்றும் மாணவர் செயற்பாட்டாளர் ஹர்ன திஸாநாயக்க ஆகியோரை விடுதலை செய்யுமாறு கோரியும் கொழும்புப் பல்கலைக்கழக சட்ட வளாகத்திற்குள் பொலிஸார் நுழைந்ததைக் கண்டித்தும் நேற்று 2

## யாழ். பல்கலைக ஊழியர்கள் இன்று முன்றலில் போராட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் இன்று நண்பகல் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பல்கலைக்கழ வாயிலில் ஒரு மணிநேரம் தமது வேலையைப் புறக்கணித்து அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக கல்வி சாரா பணியாளர்க ளின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு வேண்டும், மின்சாரம், எரிபொருள், எரிவாயு உட்பட பொருட்களின் விலைகளைக் குறைக்க வேண்டும், நியாயமற்ற வரிக் கொள்கையை உடனடியாகத் திருத்தவேண்டும், சம்பள முரண்பாட்டினை தீர்க்கும் குழுவின் அறிக்கையினை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும், அனைத்து பல்கலைக்கழகங்களையும் மீளவும் திறந்து கல்வி உரிமையை உறுதிப்படுத்தவேண்டும், 2



### ஒரே குடும்பத்தின் மர்மச் சாவு;

## பிள்ளைகள் இரண்டு பேரும் கழுத்து நெரித்துக் கொலை



வவுனியாவில் மர்மமான முறையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அனைவருமே உயிரிழந்த சம்பவத்தில் குழந்தைகள் இருவரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கயிற்றால் கழுத்து நெரிக்கப்பட்டு அந்த இரு குழந்தைகளும் கொல்லப்பட்டுள்ளனர் என்பது உடற்கூறாய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா, குட்செட் வீதி, அம்மா பகவான் ஒழுங்கையில் தந்தை, தாய் மற்றும் அவர்களின் இரண்டு பிள்ளைகள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2

## சவரம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பசறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

## சிவன் ஆலயம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தீவிரபடுத்தப்பட்டிருக்கின்றது. இவற்றுக்கும் மேலாக குருந்தூர்மலைப் பிரதேசத்தில் எத்தகைய கட்டட பணிகளும் நடக்கக் கூடாது எனும் நீதிமன்ற கட்டளையை மீறி விகாரை அமைக்கும் பணி முடிவுறு நிலையில் உள்ளது. இதுவும் இராணுவத்தின் உதவியுடன் என்பது தெரியவந்துள்ளது. தமிழ் மக்கள் விடயத்தில் தொல்லியல் திணைக்களம், நீதித்துறை என்பன சட்டங்களுக்கு வெளியில் என்றே சிந்திக்கத் தோன்றுகின்றது.

தமிழ் மக்களின் வாக்குகளை வேட்டையாட வடக்கு, கிழக்கு நோக்கிப் படையெடுக்கும் பெரும்பான்மைக் கட்சிகள் தமிழ் மக்களின் நிலங்களைத் தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்துவது தொடர்பாகவோ, குருந்தூர்மலை விடயமாகவோ, கீரிமலை சிவன் ஆலயம் சம்பந்தமாகவோ குரல் கொடுக்கப் போவதில்லை.

இந்நிலையில் அவர்களுக்கு ஆதரவு திரட்டும் சக்திகளும், அவர்களுக்குப் பின்னால் செல்லும் மக்களும் தமிழர்களின் தேசியம் தொடர்பில் சிந்திக்க வேண்டும். இல்லையெனில் தமிழர்களின் சாபத்தை அனுபவிக்க வேண்டி நேரிடும்.

நாம் மீண்டும் ஆட்சியாளர்களிடம் கேட்கின்றோம். கடந்த 75 ஆண்டு காலமாக செய்து வரும் இன அழிப்பு போதாதா? இன்னும் எவற்றையெல்லாம் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளீர்கள்? தமிழர்கள் தங்களையும், தங்களுடைய அடையாளத்தையும், நிலத்தையும் பாதுகாக்க எத்தகைய போராட்டம் நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?

நாட்டின் தற்போதைய நிலைக்கு உங்களின் இனவாத யுத்தமே காரணம் என்பதை இன்னும் உணர மறுப்பதேன்? தற்போதைய சிவன் ஆலய சம்பவம் தேசத்துக்கான போராட்டத்தை இன்னும் கூர்மை அடையவே செய்யும் – என்றுள்ளது.

## ரூபாவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதிவாகியுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்தது.

இதேவேளை நேற்றைய தினம் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி டொலரின் கொள்வனவு விலை 313.77 ரூபாவாகவும், விற்பனை விலை 331.05 ரூபாவாகவும் பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தந்தை மதுபோதையில் மனைவியிடம் தகாத வார்த்தைகளைப் பேசியதோடு தகராறில் ஈடுபட்டுள்ளார். இதனை மகன்மார் தடுக்க முற்பட்டவேளை, கத்தியை எடுத்து அவர்களில் ஒருவரை வெட்டினார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த மகன் பசறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பதுளை அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு பின்னர் கண்டி பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பசறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்.பல்கலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பல்கலைக்கழக விவகாரங்களில் கல்வி அமைச்சரின் மௌனம் ஏன் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

"இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி மார்ச் 15ஆம் திகதி ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படவுள்ளது. தீர்வு கிடைக்காவிட்டால் தொடர்ச்சியாக போராட்டம் இடம்பெறும்" என்றனர்.

## பிள்ளைகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அனைவரும் மர்மமான முறையில் செவ்வாய்க்கிழமை காலை கண்டுபிடிக்கப்பட்டது.

சிவபாதசுந்தரம் கௌசிகன் (வயது – 42) வரதராயினி (வயது – 36), மைத்ரா (வயது – 09), கேசரா (வயது – 03) ஆகிய நால்வரதும் சடலங்களே மீட்கப்பட்டன.

குடும்பத் தலைவரான கௌசிகனின் சடலம் வீட்டின் விறாந்தைப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளது. அவரது மனைவியும் பிள்ளைகளும் அவரவர் படுக்கையில் தூங்கும் நிலையில் இருந்தனர். அவர்களின் சடலங்கள் போர்வையால் நன்கு போர்த்தப்பட்டிருந்தன.

இறந்தவர்களின் உடற்கூறாய்வு புதன்கிழமை நடந்தது. அதன் முடிவில் இரு பிள்ளைகளும் கயிற்றால் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

தந்தை தூக்கில் தொங்கியதால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்திருக்கிறார் என்கிற முடிவக்கு சட்டவைத்திய அதிகாரி வந்துள்ளார். கௌசிகனின் சடலத்தில் வேறு எந்தத் தடயங்களோ, காயங்களோ இல்லாத காரணத்தால் அவரது இறப்பு தூக்கில் தொங்கியதால் ஏற்பட்டது என்கிற முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் இரு குழந்தைகளினதும் தயாரான வரதராயினியின் இறப்புக்கான காரணம் இன்னும் தெரியவரவில்லை. அவரதும் கணவனான கௌசிகனதும் உடல் உறுப்பு மாதிரிகளும் குருதி மற்றும் சிறுநீர் மாதிரிகளும் மேலதிக ஆய்வுக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திடமிருந்து முழுமையான அறிக்கை கிடைத்த பின்பே இது தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரியினால் உறுதியான முடிவுக்கு வரமுடியும்.

இதேவேளை குடும்பத்தினர் கூண்டோடு இறப்பதற்கு முதல் இரவு, அதாவது திங்கட்கிழமை இரவு அந்த வீட்டுக்கு வந்து சென்றிருக்கிறது என்று பொலிஸார் அடையாளப்படுத்தியுள்ள ஒரு ஹயஸ் வாகனம் பற்றிய விசாரணைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வாகனத்தைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

## களனிப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னிரவில் களனி பல்கலைக்கழக மாணவர்களால் போராட்டம் நடத்தப்பட்டது.

பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுத்தாக்குதல் நடத்தி போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களைக் கலைத்திருந்தனர். கண்டி, கொழும்பு பிரதான வீதி போக்குவரத்துக்கு மாணவர் போராட்டத்தால் தடை ஏற்பட்டதால் அவர்களைக் கலைக்கவேண்டியிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள களனி பல்கலைக்கழக மாணவர் சங்க செயற்பாட்டாளர்கள் இருவரும் கடந்த ஜனவரி 2ஆம் திகதி தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். 2022ஆம் ஆண்டு ஜுன் 10ஆம் திகதி அன்று கல்வி அமைச்சுக்கு அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்

## அத்தியாவசிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று முதல் தொடர்ச்சியாக ஒரு வாரத்துக்கு தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதென தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க ஒன்றியம் செவ்வாய்க்கிழமையே அறிவித்திருந்தது.

அரசின் புதிய வரிக்கொள்கைக்கு எதிராக இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அரச வைத்திய அரிகாரிகள் சங்கம் மற்றும் சுகாதாரத் துறை, மின்சார சபை அதிகாரிகள் சங்கம், பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட 40 தொழிற்சங்கள் இதில் பங்கேற்றுள்ளனஎன்று தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அனைவரும் இன்று முதல் மறு அறிவித்தல் வரை விரிவுரைகளைப் புறக்கணித்துள்ளனர். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் றொகான் லக்சிறி இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, புதன்கிழமை நாடுமுழுவதும் பல வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் மற்றும் தாதிகள் தவிர்ந்த ஏனைய மருத்துவ துறைசார் ஊழியர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக அனைத்து நோயாளர்களும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

# யாழ்ப்பாணத்தில் இன்று பெண்கள் தின நிகழ்வு



பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட தொடர்ந்தும் அனைவரும் குரல்கொடுக்க வேண்டும் என கரித்தாஸ் கியூடேக் இயக்குநர் யூஜின் பிரான்சிஸ் அடிகளார் தெரிவித்தார்.

கரித்தாஸ் கியூடேக் நிறுவனத்தின் சர்வதேச மகளிர் தினம் நிகழ்வுகள் மகளிர் உரிமையை மதிப்போம் என்ற தொனிப்பொருளிலான பேரணியும் மகளிர் சுயதொழில் முயற்சியாளர்களின் விழிப்புணர்வுக்கண்காட்சியும் விற்பனையும் இன்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள கரித்தாஸ் அலுவலகத்தில் இருந்து ஆரம்பமான பேரணி யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள மடுத்தினார் குருமட முன்றலில் நிறைவடைந்தது.

இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய கியூடேக் இயக்குநர் அருட்பணி யூஜின் பிரான்சிஸ் தெரிவித்ததாவது:

மகளிர் தினம் என்றால் மட்டும் மகளிருக்காக குரல் கொடுப்பதாக இருக்கக்கூடாது பெண்களின் உரிமைகளுக்காகத் தொடர்ச்சியாகக் குரல் கொடுக்கவேண்டும் பெண்கள் அடிமைதனத்திலிருந்து விடுதலை பெறவேண்டும். அவர்களது உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். மனித உரிமைகள் மதிக்கப்படவேண்டும். கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் இன்று மட்டுமல்ல தொடங்கப்பட்ட காலம் முதல் பொண்கள் உரிமைக்காக குரல்கொடுத்து வருகிறது.

இன்னைய சூழலை அவதானித்தால் பொருளாதார நெருக்கடிகளால் நாடே பாதிக்கப்பட்டுள்ள நிலையில் சுயதொழில் முயற்சியாளர்களாக உள்ள பெண்கள் பலர் துன்பங்களை தாங்கிக்கொண்டும் தமது குடும்பங்களை வழிப்படுத்தி வருகிறார்கள் சமூகத்தை மேம்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே பெண்களின் முன்னேற்றத்திற்கு துணை நிற்பவர்களாக நாங்கள் அனைவரும் மாறவேண்டும். பெண்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் அனைத்துத் துன்பங்களையும் நீக்க அனைவரும் பாடுபடவேண்டும்.

பெண்களை மதிக்க உரிமைகளைப் பாதுகாக்க அனைவருமே குரல் கொடுக்க வேண்டுமென மேலும் தெரிவித்தார்.



## காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கேட்டு

# உலகப் பெண்கள் தினத்தில் உறவுப் பெண்கள் போராட்டம்




(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர்போராட்டம்இன்றுடன்ஆறுஆண்டுகளை நிறைவு செய்கின்ற நிலையில் உலக மகளிர் தினமான புதன்கிழமை கறுப்பு நாளாகக் கடைபிடித்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்முன்பாகவுள்ளசுற்றுவட்டவளைவில் இந்தப்போராட்டம்காலை10.30மணியளவில் இடம்பெற்றது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்ட தொடர் ஜெனீவாவில் தற்போது நடைபெற்று வரும் தருணத்தில் வலிந்து காணாமல் ஆக்கபட்டவர்களின் உறவுகளுக்கான நீதியை சர்வதேச சமூகம் விரைந்து வழங்க இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்துமாறு போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர். இப்போராட்டத்தில் ,வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சமுகமட்ட பிரதிநிதிகள், உள்ளிட்டோர் கலந்துகொண்டு கவனயீர்ப்பு போராட்டத்தை வலுப்படுத்தினர்.

இப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் உலகெல்லாம் பெண்கள்உரிமை பேசும் இந்நாளில் தெருவில் கிடந்து அழ வைத்திருக்கிறதுஇந்தஅரசு, காலஅவகாசம்வேண்டாம் முறையான நீதி விசாரணையே வேண்டும், ஐநாவின் மனித உரிமை கூட்டத்தொடரில் இணை அனுசரணை வழங்கும் நாடுகள் இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்த ஆதரவு நல்க வேண்டும், உள்ளக பொறிமுறை எதுவும் வேண்டாம், சர்வதேச நீதி விசாரணை வேண்டும் , இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு மரணச்சான்றிதழ் தான் பதில் என்றால் கொலையாளி யார்? உங்கள் இராணுவத்தைநம்பிகையளித்தபிள்ளைகள் எப்படி காணாமலாக்கப்பட்டார்கள்? ,போன்ற கோசங்களை முன்வைத்து கண்ணீருடன் கவயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## காணி மாபியாக்களினால் மட்டக்களப்பில் தொல்லை



(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில காலமாக அரச காணிகள் மற்றும் தனியார் காணிகளை காணி மாபியாக்கள் போலியான உறுதிகள் மற்றும் ஆவணங்களைத்தயாரித்து அபகரிக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஈபிடிபி மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சதாசிவம் மயூரன்..

புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். கட்சி அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடந்தது. அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிரிழந்துபோன பலரின் காணிகளை மாவட்டத்தில் விற்றதாக போலியான கையெழுத்துடன் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனேகமான காணிகள் இவ்வாறு போலியான ஆவணங்களைத் தயாரித்து விற்கப்பட்டுமுள்ளன காணி மாபியாக்களில் எல்லா இனங்களைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து செயற்படுகின்றார்கள்.

எமது மாவட்டத்தில் போலியான காணி ஆவணங்களைத் தயாரிக்கும் மாபியாக்களை இனங்கண்டு, அவர்களுக்குத் தகுந்த பாடத்தினைப் புகட்ட வேண்டும்.

அந்த அடிப்படையில் நான் கடந்த வாரங்களில் கொழும்பு சென்று குற்றவியல் திணைக்களத்தில் இத்தகைய மோசடிகள் தொடர்பான ஆதாரங்களைச் சமர்ப்பித்திருக்கிறேன். இன்றைய நாளில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் இவ் ஆதாரங்களைக் கையளிக்கவுள்ளேன்.

இவ் உண்மைகள் ஊடகங்கள் வெளிக் கொணரவேண்டும். வாகரை தொடக்கம் துறைநீலாவணை வரை அனேகமான காணிகள் இந்த மோசடியால் பறிபோய்க் கொண்டிருக்கிறது.

எமது மாவட்டத்தில் இருக்கின்ற இராஜாங்க அமைச்சர்களின் ஒரு சில பினாமிகள், பாராளுமன்ற உறுப்பினர்களின் பினாமிகள்தான் இந்த மோசடியில் தொடர்புபட்டுள்ளார்கள் – என்றார்.

# இந்தியாவில் சட்டவிரோத அமைப்புகளின் பட்டியலில் புலிகளின் அமைப்பை நீக்குக!

## உருத்ரகுமாரன் கோரிக்கை மனு தாக்கல்



இந்தியாவில் சட்டவிரோத அமைப்புக்களின் பட்டி-யலில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்பை நீக்கவேண்டும் என கோரி மனு ஒன்று தாக்கல் செய்-யப்பட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதானி உருத்ரகுமாரன், இது தொடர்பிலான விண்ணப்ப கடிதத்தை இந்திய உள்துறை அமைச்சுக்கு அனுப்பியுள்ளார்.

இந்தக் கடிதம் கடந்த மார்ச் 8 ஆம் திகதியன்று அனுப்பப்பட்டுள்ளது.

இதில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஏன் இந்தியாவின் தடைப்பட்டியலில் இருந்து நீக்கவேண்டும் என்பதற்கான நியாயங்கள் கூறப்பட்டுள்ளன.

2019ஆம் ஆண்டு முதல் இந்தகோரிக்கையைநாடுகடந்த தமிழீழ அரசாங்கம் விடுத்து வருவதாக உருத்ரகுமாரன் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக, இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பணியாற்றுவதில் சாத்திய மற்ற நிலை ஏற்பட்டுள்ளது என்று இந்த விண்ணப்பக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

நிபுணரின்அறிவிப்புகளின் அடிப்படையில், தமிழீழ விடுதலைப்புலிகள் தற்போது எந்தவொரு நிறுவன கட்டமைப்பான அமைப்பையும், எந்தவொருநிறுவனகட்டமைப்பையும் கொண்டிருக்கவில்லை என்பது இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள்மீதானதடைக்கானகாரணமாக, பிராந்தியத்துக்கும் இந்தியாவின் ஒருங்கிணைப்புக்கும் அச்சுறுத்தல் என்ற விடயத்தை இந்தியா, வலியுறுத்தி வருகின்றபோதும், அதனை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தமது மனுவில் மறுத்துள்ளது.

இந்தநிலையில், தமிழ்மக்களின் அபிலாஷைகளை முன்னெடுக்க இந்தியாவின் இராஜந்திர உதவி அவசியம் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் வெளிநாட்டுக்கொள்கை, இந்திய மக்களின் ஒருமைப்பாட்டையும், பிராந்திய பாதுகாப்பையும் உறுதிப்படுத்துகிறது.

அத்துடன், தமிழீழம் இந்தியாவுடன் சிறப்பான உறவை கொண்டிருக்கும் என்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒன்று கூடல்

(எஸ்.அஷ்ரப்கான்)

மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தின் பழைய (ஆண்) மாணவர்களுக்கான வருடாந்த சினேகபூர்வ ஒன்று கூடல் நிகழ்வும், கலந்துரை யாடல் நிகழ்வு எதிர்வரும் 2023.03.12 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு மல்ஹருஸம்ஸ் பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இங்கு எதிர்கால அபிவி ருத்தியும், திட்டமிடலும், புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெறவுள்ளன.

மல்ஹருஸம்ஸ் பாடசா லையின் பழைய (ஆண்) மாணவர்கள் அனைவரையும் உரிய தினத்தில் ஒன்று திரண்டு நிகழ்வை சிறப்பித்து புதிய நிர்வாகத்திலும் இணைந்து எதிர்காலத்தில் பாடசாலையின் அபிவிருத்தியிலும், வளர்ச்சியிலும், முழுமையான ஒத்துழைப்பையும் தொடர்ச்சியான பாடசாலையின் உறவையும் பேணிக்கொள்ள இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டி ருக்கின்றது.

## இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு இத்தாலியில் வேலைவாய்ப்புகள்

இலங்கை பணியாளர்களை இத்தாலியில் தொழில்வாய்ப்புகளுக்காக இணைத்து கொள்வதற்காக எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

இணையத்தளம் ஊடாக இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 87 ஆயிரத்து 702 தொழிலுக்கான வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

பாரவூர்தி சாரதிகள், கட்டுமான தொழில்துறையினர், உணவக துறை, மின்சாரத்துறை மற்றும் சுற்றுலாத்துறை உள்ளிட்ட துறைகளில் தொழில்வாய்ப்புகள் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# சிங்களவர்களுக்கு மட்டும்தானா மனித உரிமைகள் ஆணைக்குழு?

செவ்வாய்க்கிழமை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்திற்குள் நுழைந்து அங்கிருந்த மாணவர்கள் மீதும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை ஏவி தாக்குதல் நடத்தினர் சிறிலங்கா காவல்துறையினர். மறுநாள் புதன்கிழமை இரவு வீதியில் போராட்டத்தில் ஈடுபட்ட களனிப் பல்கலைக்கழக மாணவர்களின் மீதும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் நீர் தாரைத் தாக்குதல் நடத்தியும் அட்டூழியம் புரிந்தனர் காவல்துறையினர்.

இந்த இரு சம்பவங்களும் தெற்கில் இப்போது–பரவலான கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளன. இதன் அடுத்த கட்டமாக இந்த இரு சம்பவங்கள் குறித்தும் விசாரணைகளை நடத்துவது என்று மனித உரிமைகள் ஆணைக்குழு முடிவு செய்திருப்பதாக டெய்லி மிரர் ஆங்கிலப் பத்திரிகை இன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழத்தில் செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளிலும் களனிப் பல்கலைக்கழகத்தில் புதன்கிழமையும் நடத்தப்பட்ட போராட்டங்களைப் பற்றி விசாரணை நடத்தப்படவுள்ளது, அந்தத் தினங்களில் மாணவர்கள் மீது காவல்துறையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை ஏவியும் நீர்த்தாரையைக் கொண்டும் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்ததாக அந்தப் பத்திரிகைச் செய்தி கூறுகின்றது.

அந்தத் தினங்களில் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது அங்கு கடமையில் இருந்த மூத்த காவல்துறை அதிகாரிகளின் பெயர் விவரப் பட்டியலைத் தருமாறு காவல் மா அதிபருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதுவும் நாளை, மார்ச் 10ஆம் திகதிக்குள் தரவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரிரான் அலஸை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வருமாறு அழைப்பாணையும் அனுப்பப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் மீதான காவல்துறையினரின் தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்வதற்காகத்தான் அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இந்த நடவடிக்கைகள் எல்லாம் நியாயமானவை. பாராட்டப்படவேண்டியவை. கட்டாயம் முன்னெடுக்கப்படவேண்டியவை. மனித உரிமைகள் ஆணைக்குழு தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு தன்னால் முடிந்தளவிற்காகவது இது விடயத்தில் எதையோ செய்ய முயற்சிக்கிறதே என்கிற திருப்தியையும் தருகிறது.

அதேநேரம் அதிருப்தியும் கவலையும் கோபமும் கூடவே எழுகின்றது. இந்த நாட்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சிங்களவர்களுக்கு மட்டுமேயானதா என்கிற கேள்வியை இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் எழுப்புவதால் வரும் உணர்வுகள் அவை.

காவல்துறையினரால் இதேபோன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் போராட்டம் மீது தை மாதம் 15ஆம் திகதி பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாணம், நல்லூரில் இதேபோன்று காவல்துறையினர் தாக்குதல் நடத்தியபோதும், போராட்டம் நடத்தியவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்தபோதும் இந்த மனித உரிமைகள் ஆணைக்குழு என்ன செய்–துகொண்டிருந்தது? தூங்கிக்கொண்டிருந்ததா? அது பற்றி ஒப்புக்குக்கூட ஒரு விசாரணையை நடத்தியிருக்கவில்லை இந்த ஆணைக்குழு. ஆனால், சிங்களவர்கள் கொழும்பில் தாக்கப்படுகின்றபோது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இந்த நாட்டில் சிங்களவர்களுக்கு மட்டுமேதான் மனித உரிமைகள் இருக்கின்றதா? அவர்களுக்காக மட்டும் தான் மனித உரிமைகள் ஆணைக்குழு குரல் கொடுக்குமா? அவர்கள் தாக்கப்பட்டால் மட்டும்தான் விசாரிக்குமா? ஆணைக்குழு பதில் சொல்லவேண்டும்.

# நாட்டுக்காக போராட்டத்தை தவிர்த்துக்கொள்ளவேண்டும்

## கீதா குமாரசிங்க வலியுறுத்து



நாட்டை மீண்டும் அதள பாதாளத்திற்குள் தள்ளுவதற்காகவா ஒரு தரப்பினர் தொடர் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். தேர்தல் இடம்பெறும் வரையிலாவது போராட்டத்தை நாட்டுக்காக தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

போராட்டம்தீவிரமடைந்தால்நாட்டுக்கு சுற்றுலா பயணிகளும் வருகை தர மாட்டார்கள், வெளிநாட்டு முதலீடுகளும் கிடைக்கப்பெறாது என மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கலால் சட்டம் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பொருளாதாரர் பாதிப்பின் நேரடி தாக்கத்தைக் குடும்பப் பெண்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். தமதுபிள்ளைகளின் அடிப்படைத்தேவைகளைக்கூடநிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலைக்கு பெண்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

2020–2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த அரசாங்கம் மேற்கொண்ட பொருளாதாரக் கொள்கையால் பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்தது, இதனைத் தொடர்ந்து மக்கள் போராட்டத்தால்ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

அரசாங்கம் எடுத்த கடுமையான தீர்மானங்களால் தற்போது நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது.அத்தியாவசிய பொருள்களின் விலைகள் கட்டம் கட்டமாகக் குறைவடைந்து செல்கிறது. இதனைக் குடும்பப் பெண்கள் நன்கு அறிவார்கள். பாரிய போராட்டத்துக்குப் பின்னர் நாடு தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது. நாட்டை மீண்டும் அதளபாதாளத்துக்குதள்ளும்வகையில்ஒரு தரப்பினர்தொடர்ச்சியானபோராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

இவர்கள் ஏன் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள், வரி அதிகரிப்புக்கு எதிராகப் போராடுபவர்கள் மாதம் லட்சக்கணக்கில் ஊழியம் பெறுகிறார்கள். நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் அனைவரும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும்.

போராட்டத்தால் அரசாங்கத்தை மாற்ற முடியாது, ஆகவே ஜனநாயக ரீதியில் தேர்தல் இடம்பெறும் வரை தொழிற்சங்கத்தினர் போராட்டங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.தேர்தலில் தமக்கான அரசாங்கத்தை தாராளமாகத் தெரிவுசெய்து கொள்ளலாம்,

நாட்டின் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் தற்போது முன்னேற்றமடைந்து வருகிறது, இவ்வாறான சூழலில் நாட்டில் போராட்டம் தீவிரமடைந்தால் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தரமாட்டார்கள், வெளிநாட்டு முதலீடுகளும் கிடைக்கப் பெறா, ஆகவே, நாட்டைக் கருத்திற் கொண்டு தொழிற்சங்கத்தினர் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் போராட்டத்தைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். – என்றார்.

# சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பியுங்கள்!

## ஹர்ஷ டி சில்வா அரசிடம் வலியுறுத்தல்



சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்காமல், நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் இறுதி தீர்மானத்தை எடுக் கும் பொறுப்பை நாடாளுமன்றத்துக்கு வழங்க முடியாது, ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிபந்தனைகளைத் தெரிந்துகொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு, ஆகவே, ஒப்பந்தம் கைச்சாத்திட முன்னர் அறிக்கையை அரசாங்கம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அரசாங்கத்திடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கலால் சட்டங்கள் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைப்பதில்சாதகதன்மை காணப்படுவதால் எதிர்க்கட்சிகள் கலக்கமடைந்துள்ளனஎன அரசாங்கம் குறிப்பிடுகின்றமை முறையற்றதாகும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கையால்நாடுபாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. ஆகவே உடனடியாக சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டும் என 2020 ஆம் ஆண்டு நாங்கள்தான் ஆரம்பத்தில் குறிப்பிட்டோம்.

நாட்டைப் பொருளாதார ரீதியில் நெருக்கடிக்குள்ளாக்கி அரசியல் செய்ய வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. பொருளாதாரமீட்சிக்காக அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஊடாக ஒத்துழைப்பு வழங்குவோம் என பல முறை குறிப்பிட்டுள்ளோம், ஆனால் அரசாங்கம் நாடாளுமன்ற தெரிவுக் குழுக்களில் எதிர்தரப்பினருக்கு இடமளிக்காமல், ஆளும் தரப்பினருக்கு இடமளித்து, ஆரம்பத்தில் செயற்பட்டதைப் போன்று முறையற்ற வகையில் செயற்படுகிறது.

கடன் மறுசீரமைப்பு வெற்றிபெற்றுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறோம், சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் இறுதித் தீர்மானத்தை நாடாளுமன்றம் தீர்மானிக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது, ஏனெனில் அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ள நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்தம் ஆகியன இது வரை நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டதன் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளை முழுமையாக செயற்படுத்தாவிட்டால் பாரிய நெருக்கடிகள் ஏற்படும். உலகில் பல நாடுகள் அவ்வாறான பிரச்சினைகளைத் தற் போது எதிர்கொண்டுள்ளன.

ஆகவே ஒப்பந்தம் கைச்சாத்திட முன்னர் ஒப்பந்தம் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்,அதனை விடுத்து அறிக்கையை சமர்ப்பிக்காமல் நாடாளுமன்றம் இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நாட்டின் நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உண்டு, ஆகவே, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் என்ன என்பதைத் தெரிந்துகொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. - என்றார்.

# இலங்கை ரூபாய் ஆண்டு இறுதியில் பெறுமதியை அதிகளவு இழக்கும்!

## பிட்ச் பொருளாதார தர மதிப்பீடு ஆய்வு

சர்வதேச நாணய நிதியத்தின் பிணையெடுப்பின் நம்பிக்கைக்கு மத்தியில் தற்போது சிறந்த செயற்பாட்டு நாணயமாக மாறியுள்ள இலங்கையின் ரூபாய் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் டொலருக்கு நிகரான பெறுமதியில் ஐந்தில் ஒரு பங்கை இழக்கக்கூடும் என பிட்ச் பொருளாதார தர மதிப்பீடு தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் குழுவின் ஒப்புதலைப் பெற முடியும் என்பதில் நம்பிக்கையுடன் உள்ளதாக பிட்ச் தர மதிப்பீட் டின் இடர் ஆய்வாளர் சீ வாங் டிங் கூறியுள்ளார்.

பலவீனமான பொருளாதாரம் மற்றும் உள்ளூட்சித் தேர்தல்களுக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தைப் பின்பற்றுவது அதிகாரிகளுக்கு சவாலாக இருக்கலாம்.

எனவே சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதலுக்குப் பிறகு இடையூறுகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்று பிட்ச் தர மதிப்பீட்டின் இடர் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் புதன் கிழமை ஒரு டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி 317.7 ரூபாவாக இருக்கின்றபோதும், இந்த ஆண்டு இறுதிக்குள் ரூபா மதிப்பு ஒரு டொலருக்கு 390 ஆக உயரும் என்று பிட்ச் தெரிவித்துள்ளது.

இலங்கை இன்னும் குறிப்பிடத்தக்க வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் தேவைகளைக்கொண்டுள்ளது மற்றும் வரவிருக்கும் மாதங்களில் அதன் வெளிநாட்டு இருப்புத் தாங்கலைக் கட்டியெழுப்ப வேண்டும். இது மாற்று விகிதத்தில் எதிர்மறையான அழுத்தத்தை ஏற்படுத்தும் என்று பிட்ச் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது. பிட்ச் கருத்துப்படி, உலகளாவிய நாணய நிலைமைகளை இறுக்குவதன் மூலம் இலங்கை ரூபாவுக்கும் அழுத் தம் கொடுக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# உலக பெண்கள் நாளான மார்ச் 8 பல நாடுகளிலும் பெண்கள் ஆர்ப்பாட்டங்களிலும் போராட்டங்களிலும் ஈடுபட்டனர். தமது உரிமைகளைப் பெறுவதற்காக அவர்கள் நடத்திய போராட்டங்களின் காட்சித் தொகுப்பு இங்கே



பிலிப்பீன்ஸ் தலைநகர் மணிலாவில் நடந்த உலகப் பெண்கள் நாள் போராட்டத்தை தடுத்து நிறுத்திய காவல்துறையினரை ஊடறுத்துக்கொண்டு முன்னேறும் இளம் பெண்.




ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் நடந்த போராட்டத்தில் சிறுமிகளும் கலந்துகொண்டார்கள்.




ஜேர்மன் தலைநகர் பேர்லினில் ”இணைந்தால் நாங்கள் மாபெரும் சக்தி” என்ற தொனிப்பொருளில் பெண்கள் நாளில் ஒன்றுகூடிப் போராட்டம் நடத்தினர் பெண்கள்.



துருக்கியத் தலைநகர் இஸ்தான்புல்லில் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களில் ஒருவர் அரசுக்கு எதிராக முழக்கமிடுகிறார்.




இத்தாலியத் தலைநகர் ரோமில் நடந்த போராட்டத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் பங்கெடுத்தனர்.




பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திலும் பெண்கள் போராட்டம் நடத்தினார்கள்.




பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஈரானியப் பெண்களுக்கு ஆதரவளித்து காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகை.



பிலிப்பீன்ஸ் தலைகர் மணிலாவில் தங்களது கைகளை முறுக்கிக்கொண்டு போராட்டத்தில் ஈடுபடும் பெண்கள்.



ஆர்ஜென்ரீனாவில் நடந்த போராட்டத்தில் பெண் ஒருவர் இப்படித் தனது முகத்தில் அலங்காரம் செய்திருந்தார்.




அயர்லாந்தின் டப்ளின் நகரத்தில் பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




ஸ்பெயின் நாட்டில் பில்பவோ நகரில் நடைபெற்ற போராட்டத்தில் பல ஆயிரக்கணக்கான பெண்கள் பங்கெடுத்தனர்.




ஸ்பெயின் நகரான வெலன்சியாவில் உலகப் பெண்கள் நாள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு முன்பாக ஈரானியப் பெண்களுக்கு ஆதரவாக ஸ்பெயின் பெண்கள் தமது தலைமுடியைக் கத்தரித்தார்கள்.







பிலிப்பீன்ஸ் தலைநகர் மணிலாவிலும் பெண்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# உக்ரைன் முழுவதும் குறிவைத்து ரஷ்யா தொடர் ஏவுகணை தாக்கு



## உயிரிழப்பு இல்லை; கட்டடங்கள் சேதம்

ரஷ்யா உக்ரைன் முழுவதும் உள்ள இலக்குகளை நோக்கி ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகின்றது, வடக்கே கார்கிவ் முதல் தெற்கில் ஒடேசா மற்றும் மேற்கில் சைட்டோமிர் வரை இந்த ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் கார்கிவ் மற்றும் ஒடேசாவில் குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டன, மேலும் பல பகுதிகளில் மின்சாரம் தடைபட்டது.

துறைமுக நகரமான ஒடேசாவில் உள்ள எரிசக்தி நிலையத்தின் மீது பெரும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதால், மின் தடை ஏற்பட்டது என்று அதன் ஆளுநர் மக்சிம் மார்சென்கோ தெரிவித்தார். குடியிருப்பு பகுதிகளும் பாதிக்கப்பட்டன, ஆனால் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்று அவர் கூறினார்.

கார்கிவ் நகரம் மற்றும் பிராந்தியத்தை 15 ஏவுகணைகள் தாக்கின. முக்கியமான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஒரு குடியிருப்பு கட்டடம் இலக்கு வைக்கப்பட்டதாக பிராந்திய நிர்வாகத் தலைவர் ஒலெக் சினெகுபோவ் கூறினார்.

கிழக்கு உக்ரைனில் உள்ள பாக்முத் நகரத்தைக் கைப்பற்றுவதறுக்காக ரஷ்யா கடந்த ஒரு மாத காலமாகத் கடும் தாக்குதல் நடத்திவரும் நிலையில் இன்னும் சில நாள்களில் அந்த நகரம் ரஷ்யாவின் கைகளில் விழும் என்று ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துள்ளது.

இந்தப் போர் இப்போதைக்கு முடியாது இன்னும் பல ஆண்டுகளுக்கு நீடிக்கலாம் என்று அமெரிக்க தேசிய புலனாய்வு இயக்குனர் அவ்ரில் ஹைனஸ் தெரிவித்தார். அதிபர் புடின் பல ஆண்டுகளுக்குப் போரை இழுத்தடிக்கத் திட்டமிட்டிருக்கலாம் என்றார் அவர். ஏனெனில் ரஷ்யா இந்த ஆண்டு பெரிய புதிய தாக்குதல்களை நடத்தும் அளவுக்கு வலுவாக இல்லை என்று புதனன்று கூறினார்.

# வீட்டுவேலையை மனைவி செய்ததற்கு ரூ. 7 கோடி இழப்பீடு வழங்க உத்தரவு



ஸ்பெயின் நாட்டில் விவாகரத்து செய்யப்பட்ட மனைவிக்கு வீட்டு வேலை செய்ததற்காக சுமார் 7 கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என கணவனுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

25 ஆண்டுகளாக ஒன்றாக இருக்கும்போது வீட்டு வேலை செய்ததற் காக குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயித்து 7 கோடி ரூபாய் ஒதுக்கவேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர் இவானா மோரால். இவருக்கு திருமணமாகி 25 ஆண்டுகளாகின்றன. இந்நிலையில், இவானாவின் கணவர் அவரை விவாகரத்து செய்துள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த அந்நாட்டு நீதி மன்ற நீதிபதி லவுரா ருயிஸ் அலமினோஸ், 25 ஆண்டுகளாக ஊதியமின்றி இவானா வீட்டு வேலைகளைச் செய்து வந்ததைக் குறிப்பிட்டு அவருக்கு குறைந்தபட்ச ஊதியம் ஒதுக்கி 25 ஆண்டுகளுக்கு கணக்கிட்டு இழப்பீடாக அந்தப் பணத்தை வழங்க உத்தரவிட்டார்.

சுத்தம் செய்வது, கழிவறை கழுவுவது, சமையலறையைபேணுவது என வீட்டை பராமரிக்கும் வேலைகளை ஆணும் பெண்ணும் சரிசமமாக பங்கிட்டு செய்ய வேண்டும் என சுட்டிக்காட்டிய நீதிபதி, அவ்வாறு சமமாக பிரித்துக்கொள்ளவில்லையெனில், வீட்டில் அதிக வேலை செய்பவருக்கு ஊதியம் வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்.

# ஐரோப்பிய எரிவாயுக் குழாய்களை தாக்கியது உக்ரைன்: அமெ. ஊடகங்கள்



ரஷ்யாவிலிருந்து பால்ட்டிக் கடல் வழியாக ஐரோப்பாவிற்கு இயற்கை எரிவாயுவை எடுத்துச் செல்லும் நார்ட் ஸ்ட்ரீம் குழாய்கள் தகாக்கப்பட்ட சம்பவத்தில் உக்ரைன் ஆதரவாளாகளுக்குத் தொடாபிருப்பதாக அமெரிக்க ஊடகங்களில் தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து அமெரிக்க உளவுத் துறை அதிகாரிகளை மேற்கோள் காட்டி 'நியூயார்க் டைம்ஸ்' நாளிதழ் தெரிவித்துள்ளதாவது: நார்ட் ஸ்ட்ரீம்–1, நார்ட் ஸ்ட்ரீம்–2 ஆகிய இரண்டு கடலடி இயற்கை எரிவாயு குழாய்களில் கடந்த ஆண்டு உடைப்பு ஏற்பட்டதற்கு சதிச் செயல்தான் காரணம் என்று கூறப்பட்டது.

இது குறித்து அமெரிக்க உளவுத்துறை விசாரணை நடத்தி வந்தது. தற்போது புதிதாக கிடைத்துள்ள உளவுத் தகவல்களின் அடிப்படையில், நார்ட் ஸ்ட்ரீம் எரிவாயு குழாய்களில் உடைப்பை ஏற்படுத்தியது உக்ரைன் ஆதரவுக் குழுவினா என்பது தெரிய வந்தது என்று அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது.

உக்ரைனில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் போா தொடுத்த ரஷ்யா மீது அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றன.

எனினும், தங்களது எரிசக்தி தேவைக்கு ரஷ்யாவையே பெரிதும் சாா்ந்திருக்கும் ஐரோப்பிய நாடுகள், போருக்குப் பிறகும் அந்த நாட்டிடமிருந்து எண்ணெய் மற்றும் எரிவாயுவை தொடாந்து இறக்குமதி செய்து வருகின்றன.

உக்ரைன் போா விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அந்த நாட்டிடமிருந்து நிலக்கரி நிலக்கரி இறக்குமதி செய்வதையும், கப்பல் மூலம் எண்ணெய் கொள்முதல் செய்வதையும் மேற்கத்திய நாடுகள் நிறுத்திவைத்தன.

எனினும், குழாய் மூலம் ரஷியாவிடமிருந்து எரிவாயு மற்றும் கச்சா எண்ணெயை பல ஐரோப்பிய நாடுகள் தொடா்ந்து இறக்குமதி செய்து வருகின்றன.

இந்தச் சூழலில், ரஷ்யாவிடமிருந்து எண்ணெய், எரிவாயுவைக் கொள்முதல் செய்வதன் மூலம் உக்ரைனில் தாக்குதல் நடத்த ரஷிய அதிபா விளாதிமீா புதினுக்கு ஐரோப்பிய நாடுகள் பொருளாதார ரீதியில் உதவுவதாக உக்ரைன் அதிபா வொலோதிமீா ஸெலென்ஸ்கி குற்றம் சாட்டினாா்.

இந்த நிலையில், ரஷியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு இயற்கை எரிவாயுவை எடுத்துச் செல்வதற்காக பால்ட்டிக் கடலடியில் பதிக்கப்பட்டிருக்கும் நாா்ட் ஸ்ட்ரீம்–1, நாா்ட் ஸ்ட்ரீம்–2 ஆகிய இரு குழாய்களில் கடந்த ஆண்டு செப்டம்பா மாதம் திடீரென கசிவு ஏற்பட்டது.

இதனால் எரிவாயு விநியோகம் தடைபட்டு, பல ஐரோப்பிய நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

இந்த நிலையில், உக்ரைன் ஆதரவாளாகளால்தான் அந்த எரிவாயு குழாய்கள் உடைக்கப்பட்டதாக தற்போது அமெரிக்க ஊடகம் தெரிவித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நாா்ட் ஸ்ட்ரீம் எரிவாயுக் குழாய் உடைப்பில் தங்களுக்கு தொடர்பிருப்பதாகக் கூறப்படுவதை உக்ரைன் மறுத்துள்ளது. இது குறித்து அந்த நாட்டின் பாதுகாப் புத் துறை அமைச்சா ஒலெக்ஸி ரெஸ்னிகோவ் புதன்கிழமை கூறுகையில், 'நாா்ட் ஸ்ட்ரீம் எரிவாயுக் குழாய் உடைக்கப்பட்டது எங்களுடைய நடவடிக்கை இல்லை' என்றாா்.

# மக்கள் தம் உடலை என்ன செய்வதென்று அமெ. ஆட்சியாளர் தீர்மானிக்கக்கூடாது

## பெண்கள் தினத்தில் கமலா ஹறிஸ் வலியுறுத்து



மக்கள் தங்களுடைய உடலை என்ன செய்யவேண்டும் என்பதை ஆட்சியாளர்கள் சொல்லக்கூடாதுஎன்றுதெரிவித்திருக்கிறார் அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹறிஸ்.

அமெரிக்காவின் புளோரிடாமாகாணத்தின் கருக்கலைப்பைத் தடை செய்யும் சட்டங்கள் தொடர்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். புளோரிடாவின் இந்தச் சட்டத்தை எதிர்த்து 5 கர்ப்பிணிள் தற்போது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். அவர்களுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கமலா.

மாநிலச் சட்டம் பெண்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்று அவர் விளித்தார்.

"மக்கள்தங்கள்உடலை என்ன செய்ய வேண்டும் என்று ஆட்சியாளர்கள் கூறக்கூடாதுஎன்றஒருவரின் ஆழ்ந்த நம்பிக்கைகளைக் கைவிட வேண்டியதில்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு அமெரிக்கருக்கும் இந்த உரிமையைப் பாதுகாக்கும் வரை ஜனாதிபதி பிடனும் நானும் பின்வாங்க மாட்டோம் என்றும் அவர் உறுதியளித்தார்.

அமெரிக்காவில் கருக்கலைப்புச் செய்துகொள்வதற்குக் கட்டுப்பாடுகள் இல்லை. ஆனால் அங்குள்ள சில மாநிலங்கள்கருக்கலைப்பைத் கட்டுப்படுத்தும் சொந்தச் சட்டங்களைக் கொண்டிருக்கின்றன. டெக்ஸாஸ் அதில் ஒருபடி மேலே போய், கிட்டத்தட்ட கருக்கலைப்பை முழுமையாகத் தடைசெய்யும் அளவிற்கு வந்துள்ளது.

''ஜனாதிபதியும் நானும் நீண்டகாலமாக தெளிவுபடுத்தியுள்ளோம், பெண்களின் சொந்த இனப்பெருக்க சுகாதாரப் பாதுகாப்பு முடிவுகளை எடுப்பதற்கான உரிமையைப் பறிப்பது உயிராபத்தை ஏற்படுத்தும் அபாயத்துடன் பெண்களின் ஆரோக்கியத்தை ஆபத்தில் ஆழ்த்துகிறது'' என்றும் கமலாஹறிஸ்தெரிவித்தார்.

## இன்ஸ்ரகிராம் பல இடங்களில் சேயலிழப்பு

உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கானபயனர்களின் இன்ஸ்ரகிராம் கணக்குகள் இன்று செயலிழந்தன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. செயலிழப்பு கண்காணிப்பு வலையத்தளமான டவுண் டிடெக்டர்ஐ மேற்கோள்காட்டி பன்னாட்டு ஊடகங்கள் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளன.

இதனால் 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயனர்கள் இன்ஸ்ரகிராம் தளத்தைஅணுகுவதில்சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர் என்று முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் சுமார் 2 ஆயிரம் பயனர்களும் இந்தியா மற்றும் அவுஸ்ரேலியாவில் தலா ஆயிரம் பயனர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றுஅந்த இணையத்தளம் தெரிவிக்கின்றது. இருப்பினும் இந்த செயலிழப்புக்கான காரணம் குறித்து மெட்டா உடனடியாகபதில்எதனையும் வழங்கவில்லை.

# படகு விபத்தில் குழந்தை உட்பட 15 பேர் செங்கடலில் மூழ்கிச் சாவு



யேமனில் செங்கடல் பகுதியில் ஏற்பட்ட படகு விபத்தில் 14 பெண்கள், ஒரு குழந்தை என மொத்தம் 15 போ உயிரிழந்தனா.

யேமனின் ஹுதைதா மாகாணத்தில் இந்த படகு விபத்து ஏற்பட்டதாக அப்பகுதி மீன் வளத்துறை ஆணையம் அறிவித்துள்ளது. அந்நாட்டின் ஹூதி கிளாச்சியாளாகளின் கட்டுப்பாட்டில் ஹுதைதா மாகாணம் உள்ளது.

கமரான் தீவில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் பங்கேற்கச்சென்றபோது கடுமையான காற்று மற்றும் அலைகளால் திங்கள்கிழமை படகு கவிழ்ந்து இந்த துயரச் சம் பவம் நடைபெற்றதாகவும், கடலில் சடலங்களைத் தேடும் பணி தொடாந்து நடைபெற்று வருவதாகவும் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனா.

வறுமை மற்றும் போரிலிருந்து தப்புவதற்காக அரபு நாடுகளில் அடைக்கலம் தேடி வரும் ஆப்பிரிக்காகள் யேமன் கடல்பகுதியை சட்டவிரோதமாகக் கடக்கும்போதும் இத்தகைய படகு விபத்து சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.




## நியூஸிலாந்து டெஸ்ட்
# குசல் மெண்டிஸின் 87 உதவ இலங்கை பலமான நிலையில்

குசல்மெண்டிஸின் 87 ஓட்டங்களுடன் நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் இலங்கை அணி பலமான நிலையில் உள்ளது. முதல்நாள் ஆட்டநேர முடிவில் 6 இலக்குகளை இழந்து 305 ஓட்டங்களைக் குவித்திருந்தது. இலங்கை அணியின் ஓட பெர்னான்டோவைத் தவிர முன்னணித் துடுப்பாளர்கள் அனைவரும் சிறப்பாக ஆடி கணிசமான ஓட்டங்களைப் பெற்றனர்.

இலங்கைகிரிக்கெட் அணிநியூசிலாந்து சென்றுள்ளது. அங்கு முதல்டெஸ்ட் ஆட்டம் இன்று தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித் தலைவர் பந்துவீசுவதற்கு முடிவு செய்தார். ஓட பெர்னான்டோவும் திமுத் கருணாரத்தனவும் தொடக்க வீரர்களாக் களம் இறங்கினர்.

இலங்கை அணி விரைவாகவே இலக்கை இழந்தது. 14 ஓட்டங்களுக்கு முதல் இலக்கு சரிந்தது. ஓட ஆட்டமிழந்தார். 13 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அதன் பின்னர் திமுத்துடன் சேர்ந்தார் குசல் மெண்டிஸ். இருவரும் சிறந்த இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தினர். இந்த இணை 137 ஓட்டங்களை 2ஆவது இலக்குக்காகப் பகிர்ந்துகொண்டது.

குசல் மெண்டிஸ் விரைவாக ஓட்டங்களைக் குவித்துக்கொண்டிருந்தார். அவரது துடுப்பு வீச்சு சதவீதம் 104.81. 83 பந்துகளில் 16 பவுண்டறிகள் அடங்கலாக 87 ஓட்டங்களை விளாசினார். சௌதீயின் பந்தில் இலக்கு மறைத்த கால்காப்பில்பட்டு (எல்பிடபிள்யூ) ஆட்டமிழந்தார். இணை பிரிக்கப்பட்ட அதிர்வில் அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே திமுத் கருணாரத்தனவும் ஆட்டமிழந்தார். ஹென்றியின் பந்தில் லதாமிடம் பிடிகொடுத்து அவர் வெளியேறினார். 87 பந்துகளில் 7 பவுண்டறிகளுடன் 50 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

களத்தில் நீண்ட நேரம் நிலைத்து நின்று ஆடிய இருவரும் அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டதில் புதிதாக களம் நுழைந்த இருவரும் தொடக்க ஆட்டக்காரர்கள் போன்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். அந்த அழுத்தத்தை அஞ்சலோ மத்தயூஸ் மற்றும் டினேஸ் சந்தமாலி ஆகியோர் சிறப்பாகக் கையாண்டனர். இந்த இணை 82 ஓட்டங்களைத் தமது இணைப்பாட்டத்தில் பகிர்ந்துகொண்டது.

37ஆவது பந்துப் பரிமாற்றத்தில் டினேஸ் சந்திமல் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதில் 6 பவுண்டறிகள் அடக்கம். அவருக்குப் பதிலாக வந்த தனஞ்சய டி சில்வா, அஞ்சலோ மத்தியூசுடன் இணைந்து 27 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மத்தியூஸ் ஆட்டமிழந்தார். 98 பந்துகளை எதிர்கொண்ட அவர் 3 ஓட்டங்களால் தனது அரைச் சதத்தைத் தவறவிட்டார். 6 பவுண்டறிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 47 ஓட்டங்கள் பெற்றார் மத்தியூஸ். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் இலங்கை சார்பில் 7 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த மூன்றாவது வீரர் என்ற பெருமையையும் தனதாக்கினார். குமார் சங்கக்கார மற்றும் மகேல ஜெவர்த்தன ஆகியோரே அந்த உயரத்தை இதற்கு முன்னர் தொட்டவர்கள்.

தனஞ்சடி சில்வாவும் 52 பந்துகளில் 4 பவுண்டறிகளும் ஒரு சிக்ஸரும் அடித்து 39 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்டமிழக்காமல் தொடர்ந்தும் களத்தில் உள்ளார். நிரோன் டிக்வெல வந்த வேகத்தில் 7 ஓட்டங்களைப் பெற்று ஓய்வறைக்குத் திரும்பினார். குசன் ராஜிதவும் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களைப் பெற்றிருக்கின்றனர்.

வெளிச்சம் போதாமை காரணமாக விரைவாகவே முதல்நாள் ஆட்டம் முடித்துக்கொள்ளப்பட்டது. 75 பந்துப் பரிமாற்றங்கள் மட்டுமே வீசப்பட்டன.

# முன்னாள் பயிற்சியாளர் மீது இந்தியத் தலைவர் பாய்ச்சல்




முதல் இரு டெஸ்டுகளிலும் வெற்றி பெற்றதால் அதீத நம்பிக்கையுடன் இருப்பதாகக் கூறுவது தவறு என இந்திய அணித்தலைவர் ரோஹித்சர்மா காட்டமாகப் பதிலளித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 2-1 என முன்னிலை வகிக்கிறது இந்திய அணி. இந்தூரில் நடைபெற்ற 3வது டெஸ்டை ஆஸ்திரேலியா வென்றது. 4வது டெஸ்ட் ஆமதாபாத்தில் இன்று தொடங்கியுள்ளது.

3ஆவது டெஸ்டில் இந்திய அணி அதீத நம்பிக்கையுடன் விளையாடியதே தோல்விக்குக் காரணம் என்ற இந்திய முன்னாள் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி கூறியிருந்தார்.

இந்நிலையில் இந்திய அணி மீதான விமர்சனம் குறித்து அணித் தலைவர் ரோஹித் சர்மா தெரிவித்ததாவது

நாங்கள் முதல் இரு டெஸ்டுகளில் வென்ற பிறகு வெளியே உள்ளவர்கள் நாங்கள் அதீத நம்பிக்கையுடன் இருப்பதாக எண்ணிவிடுகிறார்கள். இது முழுக்க அபத்தமானது. ஏனெனில் நாங்கள் நான்கு டெஸ்டுகளிலும் நன்றாக விளையாட வேண்டும் என எண்ணுகிறோம். இரு டெஸ்டுகளில் மட்டும் வெற்றி பெற எண்ணவில்லை. நாங்கள் அதீத நம்பிக்கையுடன் உள்ளதாக மற்றவர்கள் எண்ணினால் எங்களுக்கு அதுகுறித்துக் கவலையில்லை. ஏனெனில் ரவி சாஸ்திரியும் எங்களுடன் ஓய்வறையில் இருந்துள்ளார். விளையாடும்போது நாங்கள் என்ன மனநிலையில் இருப்போம் என அவருக்குத் தெரியும். தீவிரமாகப் போராடுவதே முக்கியம் என்றார்.

# அஸ்வின் தொடர்ந்து முதலிடம்




டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது. இதில் கடந்தவாரம் முதலிடத்தைப் பிடித்திருந்த இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வின் தற்போது முதலிடத்தை இங்கிலாந்தின் ஜேம்ஸ் ஆண்டர்சனுடன் பகிர்ந்துகொண்டுள்ளார்

இருவரும் தலா 859 புள்ளிகள் பெற்றுள்ளனர். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இந்தூரில் நடைபெற்ற 3வது டெஸ்ட் போட்டியில் அஸ்வின் 4 விக்கெட்கள் மட்டுமே கைப்பற்றினார். இதனால் தரவரிசை பட்டியலில் அஸ்வின் 6 தரவரிசைப் புள்ளிகளை இழந்துள்ளார்.

# 4ஆவது டெஸ்டில் ஆஸி. வலு நிதானம்

## 4 விக்கெட் இழப்புக்கு 255 ஓட்டங்கள்



இந்தியாவுக்கு எதிரான 4வது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணி முதல் நாளில் 4 விக்கெட் இழப்புக்கு 255 ஓட்டங்கள் எடுத்து வலுவான நிலையில் உள்ளது. தொடக்க வீரர் கவாஜா கடந்த மூன்று டெஸ்ட்களிலும் சிறப்பாக ஆடாதபோதும் இந்த ஆட்டத்தில் சதம் குவித்தார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 2-1 என முன்னிலை வகிக்கிறது இந்திய அணி. இந்தூ ரில் நடைபெற்ற 3ஆவது டெஸ்டை ஆஸ்திரேலியா வென்றது. 4ஆவது டெஸ்ட் ஆமதாபாத்தில் இன்று தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்மித், துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். ஆஸி. அணியில் மாற்றம் எதுவுமில்லை. இந்திய அணியில் சிராஜுக்குப் பதிலாக மி சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆஸி. தொடக்க வீரர்களான டிராவிஸ் ஹெட்டும் உஸ்மான் கவாஜாவும் நன்கு விளையாடினார்கள். இதனால் விக்கெட் இழப்பின்றி 50 ஓட்டங்களைக் கடந்தது ஆஸ்திரேலியா. விரைவாக ஓட்டங்கள் சேர்த்து 7 பவுண்டரிகளுடன் 32 ஓட்டங்கள் எடுத்த ஹெட், அஸ்வின் பந்தில் ஜடேஜாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். இதன் பிறகு லபுனே 3 ஓட்டங்களுடன் பிடுங்கினார் மி.

மதிய உணவு இடைவேளையின்போது ஆஸ்திரேலிய அணி 29 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகள் இழப்புக்கு 75 ஓட்டங்கள் எடுத்தது. கவாஜா 27, ஸ்மித் 2 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்கள்.

உணவு இடைவேளைக்குப் பிறகு கவாஜாவும் ஸ்மித்தும் நிதானமாகவும் கவனமாகவும் பொறுப்புடனும் விளையாடி இந்திய அணிக்கு நெருக்கடி அளித்தார்கள். 40 ஓவர்களுக்கு மேல் இணைந்து விளையாடி 79 ஓட்டங்கள் வரை சேர்த்தார்கள். கவாஜா 146 பந்துகளில் அரைச் சதமெடுத்தார். 135 பந்துகளை எதிர்கொண்டு 38 ஓட்டங்கள் எடுத்த ஸ்மித், ஜடேஜா பந்தில் இலக்கை எகிற விட்டார்.

அடுத்து வந்த ஹேண்ட்ஸ்காம்ப் இலக்கு 17 ஓட்டங்களில் மி பந்துவீச்சில் எகிறியதால் கிரீன் களமிறங்கினார். இவர் விரைவாக ஓட்டங்கள் எடுத்து ஆஸி. அணியின் எண்ணிக்கையை உயர்த்தினார். இதனால் முதல் நாளின் கடைசிப் பகுதியில் ஆஸ்திரேலிய அணி இன்னொரு முறை ஆதிக்கம் செலுத்தியது. நிதானமாக விளையாடிய கவாஜா, 15 பவுண்டரிகளுடன் 246 பந்துகளில் சதமடித்து அசத்தினார். கவாஜாவும் கிரீனும் 5ஆவது விக்கெட்டுக்கு 116 பந்துகளில் 85 ஓட்டங்கள் எடுத்துள்ளார்கள்.

ஆஸ்திரேலிய அணி முதல் நாளில் 90 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 255 ஓட்டங்கள் எடுத்துள்ளது. கவாஜா 104, கிரீன் 49 ஓட்டங்கள் எடுத்தபடி களத்தில் உள்ளார்கள். மி 2 விக்கெட்டுகளும் அஸ்வின், ஜடேஜா தலா 1 விக்கெட்டும் எடுத்துள்ளார்கள்.




# ரோயலை வென்றது குஜராத்

மகளிர் ஐபிஎல் போட்டியின் 6ஆவது ஆட்டத்தில் குஜராத் ஜயன்ட்ஸ் 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ரோயல் சேலஞ்சாஸ் பெங்களூரை புதன்கிழமை வென்றது.

குஜராத்துக்கு இது முதல் வெற்றி; பெங்களூருக்கு இது 2ஆவது தொடா தோல்வி.

இந்த ஆட்டத்தில் முதலில் குஜராத் 20 பந்துப் பரிமாற்றங்களில்7 விக்கெட்டுகள் இழப்புக்கு 201 ஓட்டங்கள் சோத்தது. அடுத்து ஆடிய பெங்களூா 20 ஓவாகளில் 6 விக்கெட்டுகளை இழந்து 190 ஓட்டங்களே எடுத்தது.

முன்னதாக இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத்தில், சோஃபியா டங்க்லி 28 பந்துகளில் 11 பவுண்டரிகள், 3 சிக்ஸாகள் விளாசி 65 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். சபினேனி மேக்னா 8 ஓட்டங்களுக்கு நடையைக்கட்ட, ஒன் டவுனாக வந்த ஹாலீன் தியோலும் முனைப்பாக ஆடினார்.

அவா 45 பந்துகளில் 9 பவுண்டரிகள், 1 சிக்ஸா உள்பட 67 ஓட்டங்கள் அடித்து அணியின் எண்ணிக்கையை மேலும் உயாத்தினார். பின்னா ஆஷ்லே கார்டனா 19, ஹேமலதா தயாளன் 16, அனபெல் சதாலேண்ட் 14, கேப்டன் ஸ்னேஹ ராணா 2 ஓட்டகளுக்கு விக்கெட்டை இழந்தனா.

முடிவில் கிம் கார்த் 3, சுஷ்மா வாமா 5 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தனா. பெங்களூா பந்துவீச்சில் ஷ்ரேயங்கா பாட்டீல், ஹீதா நைட் ஆகியோா தலா 2, மீகன் ட், ரேணுகா சிங் ஆகியோா தலா 1 விக்கெட் சாய்த்தனா.

இதையடுத்து 202 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு ஆடிய பெங்களூரில் அதிகபட்சமாக சோஃபி டிவைன் 8 பவுண்டரிகள், 2 சிக்ஸாகள் உள்பட 66 ஓட்டங்கள் சோத்து வீழ்ந்தார்.

இதர துடுப்பாளர்களில் அணித் தலைவர் ஸ்மிருதி மந்தனா 18, எலிஸ் பெரி 5 பவுண்டரிகளுடன் 32, ரிச்சா கோஷ் 10, கனிகா அஹுஜா 10, பூனம் கெம்னாா 2 ஓ;ட்டங்களுக்கும் விக்கெட்டை இழந்தனா.

முடிவில் ஹீதா நைட் 11 பந்துகளில் 5 பவுண்டரிகள், 1 சிக்ஸா உள்பட 30, ஷ்ரேயங்கா பாட்டீல் 11 ஒட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனா. குஜராத் பௌலாகளில் ஆஷ்லே கார்டனா 3, அனபெல் சதாலேண்ட் 2, மான்சி ஜோஷி 1 இலக்கையும் கைப்பற்றினா.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.03.2023 இல் வெளியிடப்பெற்றது.